தென்றல்

வார இதழ்

ஆசிரியர்: கண்ணதாசன்

உள்நாடு (இலங்கை உட்பட) விலை 16 புதிய காசு | வெளிநாடு 20 காசு | அலுவலகம்: 'தென்றல்', சென்னை - 6.

மலர் 6 | சென்னை. திருவள்ளுவர் ஆண்டு 1990, கார்த்திகை 26 (12-12-'59). சனிக்கிழமை | இதழ் 26

ஏட்டில் எழுத
வில்லை; இலக்
கணத்தைப்
பார்க்கவில்லை!

உணர்ச்சிகள்
துடித்தன;
உயிர்ப்பு
விளையாடியது!

இதயம் விரிந்
தது; இதழ்
சொரிந்தது!

நெஞ்சத்தின்
கணக்கு வய
லில் மணக்
கிறது!

கால வெள்ளம்
ஓடுகிறது; இக்
கவிதை வெள்
ளமும் பாடு
கிறது!

நாட்டுப் பாடல்கள்

நாட்டுப் பாடல்களில் ஒரு நாட்டினரின் சிறந்த கருத்துக்களிற் சில விளங்கப் பெறுதல் இயல்பு. முற்காலத்தில் எழுந்த நாட்டுப் பாடல்கள் பொருள் நிரம்ப இல்லாதனவாய், எப்படியாவது அந்நேரத்துத் துன்பத்தைப் போக்கக் கூடியனவாக அமைந்திருந்தன எனக் கூறுதல் கூடும். காட்டாக, கடுமையான வேலை செய்கிற மக்கள் அக்கடுமையினின்று விடுபடுவதற்காகச் சில சொற்களைத் திரும்பத் திரும்பக் கூறிப் பாடுவது உண்டு. வேலையினது கடுமை தெரியாமல் இருக்கும் பொருட்டு நாற்று நடுகின்ற பெண்டிர், சாந்து அரைக்கும் மகளிர், கல்லுடைக்கின்ற ஆட்கள், ஏற்றம் இறைக்கும் பேர்கள், வண்டி தள்ளும் ஆட்கள், இவர்கள் சில ஒலிகளை ஒருசேர எழுப்பிக் களைப்பினைப் போக்கிக்கொள்வதை நாம் கண்கூடாகக் காண்கிறோம். அப்பாடல்களைத் திரட்டி வெளியிடுவது விரும்பத்தக்கது. அப்பாடல்கள் சிலவற்றில் அருங் கருத்துக்கள் சில இருத்தல் கூடும்.

முற்காலத்திலே, பேச்சு மொழி தோன்றுதற்கு முன்னால், மகிழ்ச்சியுற்ற மக்கள் எழுப்பிய ஒலிகளே பிறகு சொல்லாக, மொழியாக மாறின என மேனாட்டு அறிஞர்கள் பலர் சொல்வார்கள். ஆதலால், பொருளற்ற சாதாரண ஒலிகளே ஒரு காலத்தில் மொழிக்கு அடிப்படையாக இருந்தன என்பது அறியப்படும். அத்தகைய வெறும் ஒலிகளாய் அமைந்த மிகப் பழைய நாட்டுப் பாடல்கள் ஒன்றும் நமக்குக் கிட்டவில்லை.

ஆனால், இக்காலத்தில் வழங்குகிற நாற்று நடவுப் பாடல்கள் முதலானவை பழங்காலந் தொட்டுத் தமிழ்நாட்டில் வழங்கியவை என்று சொல்லத்தக்கவை அல்ல. சில பாடல்களைப் பார்த்தால் அண்மையான காலத்தில், அதாவது, இருநூறு முந்நூறு ஆண்டுகளுக்கு உள்ளாகத் தோன்றியவை, அவற்றுட் பல என்று அறியலாம். வெள்ளைக்காரரைப்பற்றிய பேச்சு, கும்பெனி என்று சொல்லப்படுகிற கிழக்கிந்திய கம்பெனியைப்பற்றிய பேச்சு ஆகியவை வருகிற பாட்டுக்களையும் கேட்கிறோம்.

சில வேலைகளில், நாட்டுப் பாடல்களைக் கேட்பதாக நம்பி நாம் ஏமாறுவதும் உண்டு. சில மாட்டுக்காரச் சிறுவர்களையும், நாற்று நடுகிற பெண்டிரையும் பாடச் சொல்லிப் பார்த்தால், இதன் உண்மை விளங்கும். சில வேலைகளில் அவர்கள் சினிமாப் பாட்டுக்களையே பாடிவிடுவதைக் காணலாம்; காரணம் என்ன என்றால், நகரங்களில் வாழும்மக்கள் நடுவில் உள்ள இவர்கள் நாளடைவில் பழைய பாட்டுக்களை விட்டு விட்டுப் புதிய பாடல்களைக் கற்றுக் கொண்டு விடுகிறார்கள் என்பதே. தற்கால உலக நிலைமையில், கிராமங்களில்தான் பழைய நாட்டுப் பாடல்களைக் கேட்க முடியும்; நகரங்களில் அவை குறைந்து வருவது எல்லோரும் அறிந்த செய்தி. நாட்டுப்புறங்களுக்கும் கூடார சினிமா போவதாலும், கிராம மக்கள் நகரத்தில் வந்து திருவிழாக் காலங்களிலாவது சினிமாப் பார்த்துச் செல்கிறார்கள் ஆதலாலும், ஊர் திரும்பும்போது அப்பாடல்களைப் பாடிக்கொண்டு போகிறார்கள், ஆதலாலும், கிராமங்களில்கூட தூய பழைய நாட்டுப் பாடல்கள், கலப்பற்ற நாட்டுப் பாடல்கள் நிரம்பக் கிடைக்கும் என்று எதிர்ப்பார்ப்பது இயலாது.

சில நாட்டுப் பாடல்கள் இப்பொழுது கைவிடப்பட்டு வருகின்ற சில புத்தகங்களில் காணப்படுகின்றன. அவற்றையாவது மக்கள் சிறிது நினைவுபடுத்திக்கொள்ளுதல் நல்லது அன்றோ!

குறத்தியர் குறி சொல்ல வருவதுண்டு. குறத்தியர் சிலர் மருந்துகள் தருவதாகச் சொல்லி வருகின்ற நேரத்திலே ஏதேனும் ஒரு பாட்டுப் பாடுவார்கள்.

"குறியென்று கேட்கலையோ
கொம்பனையார் பெண்டுகளே
கூடாத பெண்களுக்குக
கூட்டிவைக்கும் மருந்து கேட்பீர்
வாழாத பெண்களுக்கு
வாழ மருந்துண்டு கேட்பீர்
யுத்தம் விலக்க என்றால்
மெத்த மருந்துமுண்டு
சண்டை கெலிப்பதற்குச்
சாரக் குளிகையுண்டு
எதிரி மயங்கவல்ல
இசையான மருந்துமுண்டு
நரைத்த நல்ல கூந்தலுக்கு
கறுக்க மருந்துமுண்டு"

எனக் கூறி வருவோர் கையிலே இருக்கிற மருந்து இஃது ஒன்றையும் செய்யாவிட்டாலும், சொல்லழகாலும், ஒலியழகாலும் எத்தனைச் சிமிள் முதலானவற்றைப் பெண்டிர்களிடம் விற்றுப்போய்விடுகிறார்கள் இவர்கள்!

இப்படியேதான், குடுகுடுப்பைக் காரனும் படபட என்றுஉடுக்கையையடித்து, மடமட என்று சொல்லைக் கொட்டுவதால், பல பேர் ஏமாந்து போகிறார்கள். அவன் வரும்போதே,

"காளி கபாலி மகாசூலி
மகேஸ்வரி
கருணை செய்ய
ஓடிவா என்னம்மா
கருணை செய்ய ஓடிவா
ஆலிற் றுயின்றதோர்
மாலின் சகோதரி
வாலைமனோன்மணி
மேல மலையாளம்
வாழும் பராபரி
பாலன்முன் ஓடிவா!
வா சக்கம்மா ஓடிவா, வா"

என்று பாடி வருவதைக் கேட்டாலே, அவன் சொல் எல்லாம் தேவியருளால் வருஞ் சொற்கள் என எத்தனை பேர் நம்பிவிடுகிறார்கள்!

ஒரு பெண்ணின் அழகை வருணிக்க வேண்டுமென்றால், கவிஞர்கள் பலர் ஒவ்வோர் உறுப்புக்கும் ஒவ்வோர் உவமை எடுத்துச் சொல்லியும் முற்ற முடியக் கூறமாட்டாது இடர்ப்படுகிறார்கள். ஆனால்,

"சுவரில் எழுதலாம்
சித்திரம்போற் பார்க்கலாம்
படத்தில் எழுதலாம்
பதுமைபோற் பார்க்கலாம்"

என்ற இரண்டு அடிகளில், எவ்வளவு திட்பமாக ஒரு பெண்ணின் அழகு தீட்டப்பட்டு, நடமாடுகிறது; அவள் அழகுக்கு ஈடாக இவ்வுலகத்தில் நடமாடும் பெண்டிர் ஒருவருடைய

டாக்டர் அ. சிதம்பரநாதனார்

— 8-ம் பக்கம் —

கண்ணதாசன் துணிச்சல் — உள்ளே

துணிச்சல்

பிறப்பு மனிதனுக்குள் ஒன்றை வைத்தது.

அதற்குப் பெயர் மனம்.

மனிதன் மனதிற்குள் ஒன்றை வைத்தான்.

அதற்குப் பெயர் நம்பிக்கை.

நம்பிக்கை ஒரு பிள்ளையைப் பெற்றது.

துணிச்சல் என்று பெயர் வைத்தது

ஆழக்கடலில், நீந்தத் தெரியாதவன் விழுந்து விட்டான்.

பிழைப்போம் எனும் நம்பிக்கையை மட்டும் வைத்திருந்தான்.

அவனுக்கு நீந்தத் தெரிந்துவிட்டது.

சோர்ந்துவிட்ட மனிதன் தனக்குத்தானே பகைவன்.

துணிந்துவிட்ட மனிதன் சாவுக்கே பகைவன்.

ஆதி மனிதர்கள் காட்டிலே வாழ்ந்தார்கள்.

அவர்கள் நிர்வாணமாகத் திரிந்தார்கள்.

அவர்களிலே ஒருவனைப் பாம்பு கடித்துவிட்டது.

அவன் செத்துப்போனான்.

அவர்களெல்லாம் பாம்பைக் கண்டு பயந்தார்கள்.

ஒருவன் துணிந்தான்.

மரத்திலிருந்து ஒரு கம்பை ஒடித்து பாம்பை அடித்தான்.

பாம்பு செத்துப் போய்விட்டது.

பாம்புக்குப் பகை கம்பு என்று அவர்கள் நம்ப ஆரம்பித்தார்கள்.

கம்பு வழித்துணைக்குப் பயன்பட ஆரம்பித்தது.

புலி ஒருவனைத் தின்றுவிட்டது.

அவர்கள் புலியைக் கண்டு பயந்தார்கள்.

ஒருவன் துணிந்தான்.

வேல் ஒன்று செய்தான்.

புலியைக் கொன்றான்.

அவர்கள் புலிக்குப் பகை வேல் என்று நம்பினர்.

வேல் உலகத்திற்குப் பயன்பட்டது.

பாம்புக்குப் பயந்தவர்கள் பயந்தவர்களாகவே இருந்திருந்தால், மனித சமுதாயத்தின் துவக்கம் பாம்புக்கே பலியாகியிருக்கும்.

ஒரு பயம்.

அதை மாற்ற ஒரு பாதை!

பயம் செத்துவிடுகிறது.

முரட்டு நாவுக்கு ஊர் அஞ்சும்.

முரட்டு மனிதனிடம் பகை அஞ்சும்.

அரிசியும், சர்க்கரையும் அப்பாவிகள் என்பதால் மனிதன் வீட்டிலே பதுக்கி வைக்கிறான்.

தீ சுடும் என்பதால் மடியில் கட்டிக்கொள்ளாமலிருக்கிறான்.

ஆடுகளும் கோழிகளும் நல்லவை.

அதனால் மனிதன் அவற்றை அடித்துத் தின்கிறான்.

புலி பொல்லாதது.

அதனால் அது மாமிசக் கடைக்கு வராமல் தப்பித்தது.

நல்லன நாடுவார் இல்லாத இடத்தே அல்லவை செய்வதே அறம்.

அவர் அல்லவை கண்டு அஞ்சுவார்; நல்லன பிறக்கும்.

முரட்டுத்தனம் நல்லன பிறப்பதற்குக் காரணமாக இருக்குமானால், முட்டாள்தனமான துணிச்சலும் நியாயமானதே.

கண்ணுக்கெட்டிய மட்டிலும் கடல் நீர்.

கரையில் நின்று பார்த்தான் கற்கால மனிதன்; வானம் கடலைத் தொடுவதைக் கண்டான்

நீர்ப்பரப்பு அங்கே முடிந்துவிட்டதாகவே நம்பினான்.

நீந்திப் போனால் வானத்தின் மேனியைத் தடவிப் பார்க்கலாம் என்று எண்ணினான்.

அவன் நீந்தவுமில்லை; வான் மேனியைத் தடவவுமில்லை.

அவன் மகன் நீந்தப் போய் மாண்டு போனான்.

பேரன் ஒரு கட்டையைப் பிடித்துக்கொண்டு அலையோடு போராடினான்.

படகு போகப் போக வானம் போய்க்கொண்டேயிருந்தது.

வானத்தின் மேனி அவன் கைக்குக் கிடைக்கவில்லை; புதிய நிலப்பரப்பு கண்ணுக்குத் தெரிந்தது.

இறங்கினான்.

அப்போது வானத்தைப் பார்த்தான்.

முன்பு கடலிலே ஒட்டிக்கொண்டிருந்த வானம், இப்போது பூமியில் ஒட்டிக்கொண்டிருந்தது.

இந்த வானத்தை விடுவதில்லை என்று தொடர்ந்தான்.

நடந்தான்.

வகை வகையான மனிதர்களை நிலப்பரப்பில் கண்டான்.

கண்ணதாசன்

காடு மலைகள் ஏறி இறங்கினான்.

வானம் போய்க்கொண்டேயிருந்தது.

அவன் வேறொரு கடற்கரைக்கு வந்திருந்தான்.

ஒரு படகு.

அதிலே பயணம்.

வானம் பிடிபடவில்லை.

முதன் முதலில் புறப்பட்ட இடத்துக்கே வந்து சேர்ந்தான்.

கரையில் நின்று அதிசயித்த கற்கால மனிதனுக்கும், இவனுக்கும் இடையே பல்லாயிரம் ஆண்டுகள் கடந்துவிட்டன.

ஒவ்வொரு தலைமுறையின் துணிச்சலிலும் ஒவ்வொரு உண்மை வெளிப்பட்டது.

கை கட்டையாக, கட்டை படகாக, படகு கப்பலாயிற்று.

கடலோடு முடிந்த உலகம், மறு நிலப்பரப்பாய், மீண்டும் கடலாய், நிலமாய்த் தெரியத் தொடங்கிற்று.

தட்டை உருண்டையானது.

மரத்தில் தூங்கிய மனிதனுக்கு வீடு கிடைத்தது.

தழை கொடிகளில் மறைந்த மேனிக்குப் பட்டாடை கிடைத்தது.

காலம் நடந்தது.

எட்டாத இடமெல்லாம் எட்டிற்று.

கிட்டாத பொருளெல்லாம் கிட்டிற்று.

மங்கையின் அரை அடி முகத்தைச் சந்திரனுக்கு உவமித்தான் அன்றையக் கவிஞன்.

சந்திரனில் பத்தாயிரம் மைல்களுக்கு மலை இருக்கிறது என்று கண்டுபிடித்தான் இன்றைய விஞ்ஞானி.

ஒருவன் கண்ணாலே வியந்தான்.

ஒருவன் கையாலே அளந்தான்.

ஒருவன் நிலவைக் கண்டு நீராடினான்.

ஒருவன் நிலவைப் பிடிக்கப் போராடினான்.

பயந்தவனுக்கு உலகம் வழிபாட்டுப் பொருள்.

துணிந்தவன் உலகத்திற்கு வழிபாட்டுப் பொருள்.

சண்டைபோடச் சக்தியற்றவனின் சமாதானப் பேச்சு கோழைத்தனம்.

சக்தி உள்ளவனின் அமைதி பெருந்தன்மை.

துணிந்தவன் மீனைக்கண்டு 'சப்மரீன்' படைத்தான்.

பயந்தவன் மீனைக் கண்டு 'மச்சாவதாரம்' படைத்தான்.

வீட்டைக் கட்டியவன் துணிச்சல்காரன்.

அதற்கொரு பூட்டைக் கண்டவன், பயந்தவன்.

இயற்கை ஒன்றைப் படைத்தது.

துணிந்தவன் அதைக் கூடிக் கலந்து ஒரு குழந்தையைப் பெற்றான்.

பயந்தவன் அதைக் கும்பிட்டு வணங்கித் தானும் மடிந்தான்.

கடவுள்கூட, துணிந்தவனின் மனதில் வசிக்கிறான்.

பயந்தவனிடம்தான் கோவில் கேட்கிறான்.

கோடிக்கணக்கில் மக்கள் பிறந்தனர்.

நூற்றுக்கணக்கில்தான் சரித்திரத்தில் காண்கிறோம்.

தலைமுறைதோறும் வரும் பிறப்பு ஒவ்வொன்றிலும், உன் நினைவு அழுத்தமாகப் பதிய வேண்டுமென்றால் துணிந்தவனாக வாழ வேண்டும்.

துணிச்சல்காரன் கல்லை உண்டாலும் செரிக்கும்; கண்களிலே வீரஒளி பிறக்கும்; முகத்தினிலே மங்காத எழில் நிலவும்; தொட்டது துலங்கும். தொடுத்தது நடக்கும்.

சாவு பிறரைக் கொல்லுகிறது.

துணிந்தவன் சாவைக் கொல்லுகிறான்.

இயற்கை பிறரை ஆள்கிறது.

துணிந்தவன் இயற்கையை ஆள்கிறான்.

ஒரே கேள்வி:

நீ ஆள்பவனாக மாற விரும்புகிறாயா?

ஆளப்படுபவனாக இருக்க விரும்புகிறாயா?

அடிமைக்கு மூச்சுமட்டும் போதும்; வீரனுக்குத்தான் பேச்சும் வேண்டும். ★

அடுத்த இதழில்...

கண்ணதாசன்-

உறவு.

"போற்றுபவர் போற்றட்டும்; புழுதி வாரித்
தூற்றுபவர் தூற்றட்டும்; தொடர்ந்து செல்வேன்
ஏற்றதொரு கருத்தை என(து) உள்ளம் என்றால்
எடுத்துரைப்பேன்; எவர்வரினும் நில்லேன்; அஞ்சேன்!"

எண்ணம்

மலர் 6 || 12-12-'59 || இதழ் 26

அடுக்கடுக்கான கொடுமைகளுக்கு முடிவில்லை! அட தமிழா, நீ மாண்டுபோ!

சிறகடித்துப் பறக்கின்ற பறவைக்கு நினைத்த மரத்தில் கூடு எழும். ஓடி வரும் காட்டாறு கூடி விழுந்து மகிழுதற்கோர் நீர்நிலையுண்டு. மழைக்கு நனைந்து வருகின்ற ஆட்டுக்கும் ஒதுங்க ஒரு தொழுவுண்டு! ஆனால் உனக்கு...

எதுவுமேயில்லை! இடம் எங்குமேயில்லை! இடுகாட்டிலும் உனக்கு இடமில்லை! கடலில் விழுந்து மாண்டு போ! எந்தக் கடலின் மடியில் முத்தெடுத்தாயோ அந்தக் கடலின் அடியிலேயே தூங்கு; போ! போ! எந்தக் கடல் நடுங்கக் கலம் விட்டாயோ, அந்தக் கடலுள்ளேயே உன் உடல் ஒடுங்க விரைந்து போ! போ!

காட்டில் திரியும் விலங்குகளுக்கும் கட்டளையில்லை கூட்டில் உறங்கும் புள்களுக்கும் ஆணையில்லை. இசைபாடும் கானநுவிக்கும் பணியிடுபவனில்லை. அவற்றின் வாழ்வை-மகிழ்வை-போக்கைக் குலைப்பதில்லை நீ! அவை என்றும் இன்பப்பள்ளுப் பாடுகின்றன.

உனக்கு ஆணையிடுவாருண்டு; கட்டளைகளுக்கு உன் தலை வணங்கும்; உன்னைப் பணிகொள்வார் பற்பல நாட்டார் தேயிலையும் ரப்பரும் ஈயமும் காப்பியும் உன் உழைப்பின் அறுவடைகள் நாடு பல உன் வியர்வையினால் மெருகேறின; பொலிவு பெற்றன.

ஆனாலும் நீ அந்த அழகு நிலத்தில் உலவக்கூடாது; நடக்கக்கூடாது அடிமை நீ நடந்தால் அதன் எழில் என்னாவது? எனவே நீ ஓடு! ஓடு! ஓடு! எங்கே என்று கேட்கிறாய்? அட மடையனே! அலைகடல்தானடா உனக்கு அடைக்கலம்! வேறு ஏதும் படைக்கலம் ஏந்தி வென்றிடலாம் என்று நினைக்கிறாய்?

நாடுவிட்டு நாடு சென்றோர் பலருண்டு.

நாடோடிகளால் எழுந்தது தான் அமெரிக்கா நாடு. நாடு கண்டுபிடித்தோரால் ஏற்றுமதி செய்யப்பட்ட கைதிகளால் எழுந்ததுதான் ஆத்திரேலியா! நாடுவிட்டு நாடு போனோர் ஆளும் காட்சிதான் தென்னாப்பிரிக்க அரசு. அன்றைரெல்லாம் ஆள்வதற்கும் வாழ்வதற்கும் மத உரிமை காப்பதற்கும் நாடுவிட்டு நாடு ஓடினர். நீ எதற்கோடினாய்?

ஒரு பிடி சோறு பிச்சை கேட்பதற்கு! ஆம், உள்நாட்டில் பிச்சை எடுப்பதற்கு வெட்கப்பட்டு வெளிநாட்டில் சோறு கேட்க ஓடினாய்! போன இடத்தில் கையை ஏந்தியதோடா நின்றாய்?

இல்லை! இல்லை! கைவலிக்க, மெய் அலுக்க; கால் சோர, மேல் நோக; உழைத்தாய்! "யாத்ரீகத் தந்தைய"ரும் "கைதிக் கூட்டத்தா"ரும்பிறரும் கண்டு வியக்கும் அளவு நீ உழைத்தாய்; உயிரைத் தந்தாய்.

நீ உயிரைத் தந்தபின்-அவர்கள் நாட்டில் புதுமைகள் எழுந்தபின்-காடுகளில் சழனி தெரிந்தபின், உன்னால் யாருக்கென்ன லாபம்? சுவைக் கறி இலையில் வட்டிக்கப்பட்டபின், கறிவேப்பிலையால் என்ன பயன்? சொல்லடா, சொல்!

கறி இலையில் வட்டிக்கப்பட்டபின் கறிவேப்பிலைக்குப் பயன் உண்டென்றால், பர்மாக்காரன் உன் கழுத்தைப் பிடித்து வெளியே தள்ளுவானா? இலங்கைக்காரன் உன்னை எட்டி உதைத்திருப்பானா? இல்லை என்றால் அந்த வழிகளில் இப்போது மலாயாக்காரனும் புதிந்திருப்பானா?

"வேண்டியமட்டும் வெள்ளி தருகிறேன்" என்றழைத்தவன் இன்று கொள்ளி வைத்திருப்பானா? சொல்லடா தமிழா, சொல்! என்ன சொல்லுவாய்?

பர்மாக்காரன் உன்னை வங்காள விரிகுடாவில் தூக்கி எறிந்தது பழங்கதையாகிவிட்டது. அடுத்துக் கெடுத்த சிங்கள நாட்டார் உன்னைக் கெடுப்பதற்கென்றே பல தீய வழிகளைக் கையாண்டிருக்கின்றனர் என்பதை உலகறியும். இது திட்டமிட்டுச் செய்யப்பட்ட சதி வேலை என்பதை இப்போது வந்த செய்தி சொல்கிறது. ஆம்! நல்லோர்போல்-மக்களாட்சிப் பண்பினை மதிப்போர்போல், கடல் கடந்து வந்தோரே! மலைக்காட்டில் திரிவோரே! உடன் குடியுரிமைக்கு மனுச் செய்துகொள்ளுங்கள். சட்டப்படி குடியுரிமை பதிவு செய்யப் பெற்றோர்க்கே. இலங்கையில் உயிர் வாழ உரிமையுண்டு. உடன், பதிவுக்கு மனுச் செய்யுங்கள். சட்டத்திற்குப் புறம்பானவற்றைத் தள்ளுவோம். மற்றவற்றை ஏற்றுக்கொள்ளுவோம்!" என்றெல்லாம் இலங்கை அரசினர் முழங்கினர். குடியாட்சிப் பண்பில் ஊறித் திளைக்கிறதே சிங்கள அரசு என்று நாம் எண்ணிய நேரத்தில் இடி விழுந்தது. குடியுரிமை வேண்டிய பத்து இலட்சம் தமிழர்களுள் ஐம்பதாயிரம் பேருக்கே அவ்வுரிமை வழங்கப்பெற்றது. "மிச்சமுள்ள ஒன்பது இலட்சத்து ஐம்பதாயிரம் பேரின் வாழ்வு என்னாவது?" என்று கேட்போர்க்கு "இதுதான் சட்டம்!" என்றது சிங்களச் சட்டம். 'இது என்ன சட்டம்!' என்று நம் வேதனைப்படுக்கையில் "உழைப்பைப் பெறும்மட்டும் பேசாதிருந்துவிட்டு, செயல் முடிந்ததும் கடலில் தூக்கியெறியும் கயவர்கொடுமை இதுவோ?" என்று துன்பப்படுகையில்...மற்றொரு சேதி வருகிறது; மண்டையை நொறுக்குகிறது. ஐம்பதினாயிரம் பேருக்கே குடியுரிமை வழங்கியது சட்டப்படி இல்லையாம்; திட்டமிடப்பட்ட சதியின்படியாம்! அண்மையில் இலங்கையில் முழங்கியிருக்கிறார் ஒருவர். இப்படி கருந்தேள் கொட்டிய தெனக் கடும் மொழி கொட்டியவர், இத்திட்டத்தின் தந்தை மறைந்த பண்டார நாயகாதான் என்று அறுதியிட்டுக் கூறியிருக்கிறார். ஐம்பதினாயிரம் பேருக்குத்தான் குடியுரிமை தருவதென்று முடிவு செய்துகொண்டு, "ஆடிய கபட நாடகத்திற்குப் பெயர்தான் இலங்கை அரசினர் ஆட்சி முறையா? இதுதான் மக்களாட்சிப் பண்பா? மூலைக்கொரு கட்சி வைத்துக்கொண்டு ஆளுக்கொரு பேச்சுப் பேசும் சிங்கள வெறியரே! இதற்குத்தான் தில்லிக் கொற்றத்தின் பெரிய மனிதர்களுடன் ஒப்பந்தம் செய்துகொள்ளும்போதே தில்லி அரசினரும் நீங்களும் கூடி இப்படிச் சூதுக்கு வித்திட்டுக்கொண்டீரோ? என்ன செய்தீர்?

உம் கொடுமையைத் தாங்கிக்கொள்வதற்கு முன்னரே, மலாயாவும் கொடுமைகளை வீசுகிறதே! தமிழா! இனி நீ மலாயாவிலும் வாழமுடியாதடா! மலாயாவிலும் வாழமுடியாது! அவனும் இன்று உன்னை நெருக்கித் தள்ளுகிறான் நீ அவன் நாட்டை வளம்படுத்தத்தான் அங்கு ஓடினாய். அவன் உனக்கு அளித்த ஒரு பிடி சோறுக்காக நீ உன் உடலையே ஒப்படைத்தாய் அவன் வாழ்வில் அமைதியை-வளத்தைச் சேர்த்தாய். அதற்கு அவன் இன்று தரும் பரிசென்ன? உன் வாழ்வில் வளம் சேர்க்கும்-அமைதி காட்டும் மனைவி மக்களோடு நீ வாழக்கூடாதாம். ஆம்! நீ கடல் கடந்தபோது உன் மனைவி மக்களை இங்கே விட்டுச் சென்றாய்; அங்கே உழைத்தால் ஒரு பிடியாகிலும் சோறு கிடைக்கும் என்ற நம்பிக்கையால் உழைத்து உழலும் நீ அமைதி காண உன் மனைவி மக்களை அழைத்துக் கொள்ளத் துடிக்கிறாய். ஆனால் மலாயா சொல்கிறது, நீ உன் மனைவி மக்களை அழைத்துக்கொள்ளக்கூடாதென்று. நாளெலாம் ரப்பர் காட்டில் ஈயச் சுரங்கத்தில் அலையும் நீ, உன் மனைவி மக்களை எங்கோ விட்டுவிட்டு அலைய ஒப்பாதாய். அப்படியானால், நீ திரும்பவும் உன் நாட்டிற்கு ஓடிவர முனைவாய். இங்கு வந்தால் உன்னை வரவேற்க எவருமில்லை. வந்தால் இங்கு தெருவில் அழிவாய்; அன்றேல் வழியில் கடலிலேயே மாள்வாய்! அப்போது அவர்கள் தொல்லை தீர்ந்துவிடும்; உன் கதையும் முடிந்துவிடும்

ஆம், தமிழா! இனி உனக்கு விடிவில்லை; உன் துன்பங்களுக்கு ஒரு முடிவில்லை! அடுக்கடுக்காக எழும் துயருக்கொரு முடிவில்லை; அட, தமிழா! இனி உனக்கொரு நாடில்லை! வீடில்லை! தாயகம் என்று சொல்லிக்கொள்ளவும் உனக்கொரு வக்கில்லை; வழியில்லை; அதனால் வாழ்வில்லை!

பூச்சி புழுக்களுக்கும் உள்ள உரிமை உனக்கில்லை; புலி யானைக்கு உள்ள காடும் உனக்கில்லை! எதுவுமே இல்லை! எதுவுமே இல்லை! இனி, உனக்கு இறப்பைத்தவிர எதுவுமே இல்லை! இல்லை! ★

100 வினாக்கள்.

"தென்றல்" பொங்கல் மலரில் ஆசிரியர் **கண்ணதாசன்** 100 ஐய வினாக்களுக்குப் பதிலளிப்பார். தோழர்கள் விடுக்கும் வினாக்களுள் சிறப்பானவற்றை மட்டும் தேர்ந்தெடுத்துப் பதில் அளிக்கப் பெறும்.

உங்கள் வினாக்களை இத்திங்கள் 25-ம் நாளுக்குள் அனுப்பிடுக. மடலின்மேல் "மலர் வினா" என்று எழுதுக.

சந்தாதார்கள் கவனிக்கவும்...

"தென்றல் பொங்கல் மலர்" பெற விரும்பும் சந்தாதார்கள் மலருக்குத் தனியாகப் பணம் அனுப்ப வேண்டும்.

சந்தாதார்களுக்கு மலர் தவறாமல் கிடைக்க பதிவுத் தபாலில் அனுப்ப வேண்டியதிருப்பதால் தபால் செலவு சேர்த்து ரூ. 2-55 அனுப்பி வைக்க வேண்டுகிறோம்.

சொல்லின் பொருள்

பழஞ் சொல் தொகுப்பு-பொருளின் பகுப்பு-கண்டுணரத் திறனற்றோர் கதைக்கின்றனர்-இலக்கியமெங்கும் ஒளிரும் சொல் காணீர் !

அன்றொரு நாள், வடவேங்கடம் தென்குமரி ஆயிடை தமிழ் கூறு நல்லுலகத்தின் கண் நம் தமிழ்ச் செல்வி செங்கோலோச்சினாள். அந்நாளில் தலைசிறந்த தமிழ்ப்புலவர்கள் தமிழணங்கினைத் தகைசால் அன்புடன் தழீஇப் போற்றினர். அந்நங்கைக்கு அகம்புறம் என்னும் தொகு கலன்களைப் பூட்டினர். நூலெனும் ஆடையை நுண்ணிடையில் அணிவித்தனர். சொல்லும் பொருளும் கனிந்த பாவெனும் பாற்சோறூட்டி வளர்த்தனர். சங்கம் என்னும் பொங்கு பூந்தடத்தில் விளையாட விடுத்தனர். நன்னிலையெய்திய நற்றமிழ் நங்கை ஒப்புயர்வற்றுத் திகழ்ந்தனள்.

இவ்வண்ணமாகப் பல்லாண்டு பாங்குடன் விளங்கினள். ஒருநாள், கடல்கோள் என்னும் கள்வன் வந்தான். குமரிக்கோட்டையும், பஃறுளியாற்றையும் விழுங்கினன். கன்னியைக் கவரக் கடிதில் விரைந்தான். இதனைக் கண்டதும் கன்னி கலங்கினள்; புலம்பினள். புலம்பலொலி கேட்ட புலவரும் மன்னரும் கன்னியைக் காக்க விரைந்தனர்.

ஆனால். அக்கள்வன் அகம்புறம் என்னும் தொகு கலன்கள் அனைத்தும் கவர்ந்து அகன்றனன்! என்னே, கள்வனின் இழிசெயல்! இயல்,இசை, நாடகம் பயின்ற நூல்கள் எல்லாம் பாழ்பட்டன. தப்பிய தமிழணங்கு நிலைகுலைந்தனள். தண்டமிழ்ப் புலவரும் தகைசால் மன்னரும் தம் பதி அழியவே கபாடபுரம் போந்தனர்.

சில்லாண்டு செல்லவே, நலிவுற்ற நற்றமிழ் நங்கையும் பொலிவுற்றனள். கலை நூல் பலவும் கிளைத்தெழுந்தன. ஒல்காப் பெரும்புகழ் தொல்காப்பியனும் தொன்முறை வழுவாத தொன்னூல் இயற்றினன். அதுவே தொல்காப்பியமாம். ஈண்டும் அவ்வாறாக அவ்வாரணங்கு அழகுடன் மிளிர்ந்தனள்.

மீண்டும் தமிழ் கடல்கோளுக்கு இரையாகியது. மாண்ட பல நூல்களும் மாண்டொழிந்தன. எஞ்சியவை சில நூல்களே. தொன்னூலாகிய தொல்காப்பியம் மட்டும் கடல் வாயினின்று மீண்டது.

தொல்காப்பியம் என்பது தலை, இடை என்னும் இரு சங்கங்களிலும் இலங்கிய நூல்களின் பிழிவேயாகும். இதற்குச் சான்றாக அந்நூற்பாவின் இறுதியில் என்ப, என்றிசினோரே, என்மனார் புலவர் என்னும் சொற்கள் காணப்படுகின்றன. எனவே இடைச் சங்கத்தில் தோன்றிய தொல்காப்பியத்திற்கு முன்பே பல இலக்கிய இலக்கணங்களும் இருந்தன என்பதை நன்கு அறியலாம்.

எவர் கூற்று எவ்வாறாயினும், நமக்குத் தொன்னூல் நல்கிய நற்றமிழ்ப் புலவனாகவே தொல்காப்பியன் இருக்க வேண்டும். அவன் தமிழ் மரபினின்று சிறிது வழுவினன் ஆயினும் அஃது அக்கால நிலைக்கு உடன்பாடாம். வடபுலமாக்கள் பயின்ற ஆரிய மொழியின் கலப்பினால் தமிழ் நூலைச் சிறிது மாற்றியமைத்தனன். அவன் மொழியின் அடிப்படையைக்கெடுக்க வில்லை இவற்றை அந்நூல் வல்லோர் நன்கு உணர்வர்.

கடல்கோட்பட்டு அழிவுற்ற தமிழின் நிலையைத் திருத்தி செம்மைப்படுத்தி, முத்தமிழிற்குப் புத்துயிரூட்டியவன் தொல்காப்பியனே யாவான். தமிழின் தொன்மையைக் காத்து இளமையூட்டி இனிய கன்னித் தமிழிற்குத் தொன்னூல் தந்ததனால் அவனை, அக்காலப் புலவர்கள் தொல்காப்பியன் என அழைத்தனர். நம் தமிழ்மொழிக்குத் தொன்னூலாகத் திகழ்வது தொல்காப்பியம் ஒன்றேயாகும். இத்தகையோனை யாம் தமிழன் என்று கூறினால்தான் யாமும் தமிழனாகத் திகழமுடியும். தொல்காப்பியம் இல்லையேல் ,தமிழ் இல்லை. தமிழனும் இல்லை. தமிழறமும் இல்லை. எனவே, யாம் தொல்காப்பியனைத் "தமிழன்! தமிழன் !!" எனப் பன்முறை பைந்தமிழ்ச் சொல்லால் பாராட்டவேண்டும்.

நிற்க, இவ்விரண்டாம் கடற்கோளுக்குப் பிறகு கடைச்சங்கம் மதுரையில் தோன்றியது. கடைச் சங்கப் புலவர்களுக்கு நூல், இடைச் சங்கநூலாகிய தொல்காப்பியமாகும். இச்சங்க இலக்கியங்கள் அனைத்தும் அகப்பொருள், புறப்பொருள் ஆகிய இருபொருள் பற்றி இயற்றப்பட்டுள்ளன. பதினெண் கீழ்க்கணக்கு நூல்களாகிய திருக்குறள் நாலடியார் போன்ற நூல்கள் தொன்னெறியாகிய நன்னெறியை நவில்கின்றன. சிலப்பதிகாரம், மணிமேகலைபோன்ற காப்பிய நூலும் கடைச் சங்க நூலாகும்.

நம்மனோர் பலர் சங்க இலக்கியங்களின் மாண்பினை உணராமல் இருப்பது வியப்பாகும். நமக்குத் தொல்காப்பியமும் கடைச்சங்கஇலக்கியங்களுமே தமிழின் தொன்மையறியப் பேருதவி புரிகின்றன. சங்க இலக்கியங்களில் வந்துள்ள சொற்களில் தொண்ணூற்றொன்பது விழுக்காடு விழுமிய வண்டமிழ்ச் சொல்லேயாகும். அவற்றுள் ஒரு சில சொற்கள் வடமொழியாக இருப்பின் அவை அந்நாட்டிலுள்ள செய்பொருள், வினைபொருள் ஆகியவற்றின் பெயராக இருக்கவேண்டும். குங்குமம்போன்ற சொற்கள் இவ்வகையைச் சார்ந்தவையாகும். இவ்வகையின அல்லாத வேறு சில சொற்களும் அருகி வந்துள்ளன. இவ்வாறு வருவது எம்மொழிக்கும் உடன்பாடாகும். இலத்தீன் மொழியில் தோகை என்னும் தமிழ்ச் சொல் இருப்பதால் அது அம்மொழிச் சொல்லாகாது. இத்தகைய சொற்கள் பல நாடுகளுக்கும் இடையில் நடைபெற்று வந்த வாணிகத் தொடர்பு பற்றி வருவதாகும்.

இயற்கைப் பொருளைக் குறித்தும், பண்பு தொழில் ஆகியவற்றைக் குறித்தும் வந்துள்ள சொற்கள் அனைத்தும் தமிழ்ச் சொற்களாகும். நம் சங்க இலக்கியங்களில் வானின் கண் தோன்றும் ஞாயிறு, மதி, விண்மீன், நிலத்தின் கண் உள்ள மலை, கடல், முதலிய இயற்கைப் பொருள் குறித்த எல்லா சொற்களும் தூய தமிழ்ச்சொற்களாகவே உள்ளன இஃது எவ்வாறெனின் உலகின் கண் உள்ள தொன்மைசான்ற மொழிகளிலும் தலைமையாக வீற்றிருந்த மொழி நம் கன்னித்தமிழாகும். இதனை மொழியாராய்ச்சி வல்லுநர் பலரும் மொழிந்துள்ளனர் ஆகவே இத்தகைய சங்கத் தமிழினிடத்து வேற்று மொழியாகிய ஆரியமொழிச் சொற்கள் வந்துற்றது யாங்ஙனம் ?

தொன்மையும், மொழிவளமும், பல கலை நூல்களும் பெற்றுத் திகழ்ந்த தமிழில வேற்றுமொழியைப் புகுத்த, தமிழ்ப் புலவர்கள் ஒருக்காலும் உடன்படார். ஆரியமொழிப் புலவர்கள் தாங்கள் இயற்றும் தமிழ்ப் பாடலில் தங்கள் மொழியைத் திணிப்பின், சங்க காலச் சான்றோர்கள் சிறிதும் அவற்றை ஏற்றுக்கொள்ளார். அப்பாடலைச் சொற்குற்றம் உடையது என ஒதுக்கிவிடுவர். எனவே தமிழ் வளர்த்த முச்சங்கங்களும் மொழியின் தூய்மையைக் காத்துவந்தன என்பதை நாம் அறிய வேண்டும்.

தமிழில் பிற சொற்கள் வந்தால் தமிழிசை கெட்டு இனிமை குன்றும் என அப்புலவர்கள் உணர்ந்தனர். தமிழ் இனிமையுடையது. தமிழ் என்றாலே இனிமை என்னும் பொருளைத் தரும். எனவேதான் அக்காலத் தமிழ்ப்புலவர்கள் முத்தமிழின் நடுவண் இசையை வைத்து இயல், இசை, நாடகம் என வழங்கினர்.

நம் செந்தமிழ்ப் புலவர் நக்கீரரைப் பற்றிப் பல கதைகள் வழங்குகின்றன. அவை புனைகதையாக இருப்பினும் அவற்றில் ஓர் உண்மை நிகழ்ச்சியும் தமிழர் விருப்பமும் கொள்கையும் புலனாகின்றன. சங்கப் புலவருள் செம்மாந்து வீற்றிருந்த நக்கீரன் நாவன்மை வாய்ந்த நாவலனாகவும், பாவன்மை வாய்ந்த பாவலனாகவும் விளங்கினான். அவன் சொற்குற்றமோ பொருட்குற்றமோ உடைய பாட்டினைக் கண்டால் அவற்றைச் சங்க இலக்கியங்களில் புகாதவாறு காத்துவந்தான். யாம் இக்கதையின் வாயிலாக இப்பேருண்மையை உய்த்துணர வேண்டும். இத்தகைய தலைசிறந்த புலவர்களால்தான் தமிழ் தூய்மை பெற்றுவந்துள்ளது.

இந்நாளில் சிலர் தூய தமிழ்ச்சொற்களையெல்லாம் வடசொல் என வாய் கூசாமல் கூறிவருகின்றனர்.'உலகு' என்னும் தமிழ்ச்சொல் ஆரியசொல் அன்று என்பதற்கு. நம் அருந்தமிழ்ப் பாவாணர் பகுத்துக் கூறுவதைக் காண்கின்றோம். இங்ஙனமாக அவர் பல அரிய தமிழ்ச் சொற்களை மக்கள் அறிய, கூறுபடுத்திக் கூறுகின்றார்.

சங்க இலக்கியங்களில் பெரும்பான்மையாக வந்துள்ள சொற்களை வடமொழியென்று கூறுபவன் தமிழன் அல்லன். அவன் தமிழின் தொன்மையை யுணர்ந்தவன் அல்லன். அத்தகையோன் பரத்தையரின் மையலில் வீழ்ந்து தன் கற்புடை அன்னையின் கற்பினை ஐயுறும்கசடனாக இருக்கவேண்டும். இக்கயவர்களை வள்ளுவர் கண்டால், "மக்களே போல்வர் கயவர்!" எனக் கூறி, அவர் கயமைப் பண்பை உலகறியப் பறைசாற்றியிருப்பார். சங்க இலக்கியங்களிலும், திருக்குறளிலும் குறை காண்பவர்கள் அத்தகைய அற்பர்களே யாவர்.

தமிழின் தொன்மை அறிந்து போற்றாதவன் தொல்லறம் சான்ற தொல்குடியில்பிறந்த தமிழனாகமாட்டான் அவன் ஆரியனின் அடிவருடியாகவோ ஆரியனாகவோ இருக்க வேண்டும். அத்தன்மை வாய்ந்தோர் தான் திங்களைக் குறிக்கும் தீந்தமிழ்ச் சொல்லாகிய வான்மதியினை வடமொழியெனக் கூறி வருபவராவர்.

வெள்ளிடை மலையாகத் தமிழ்ச் சொல்லே என அறியக் கிடக்கும் வான்மதியை தமிழர்களுக்கு சங்க இலக்கியத்தினின்று சான்று காட்டி விளக்குவது வியப்பாகும் இத்தகைய இழிநிலை ஏற்படும்போது வியப்பாகும். இத்தகைய இழிநிலை ஏற்படும்போது நாம் வாளாவிருப்பது தகாது. கயவர் தூவிய களை விதையை முளையிலே கிள்ளிவிட்டோமானால் மூடர்களின் முணுமுணுப்பு முற்றுப்பெறும்.

அன்று நல்வினை செய்த நற்றமிழர் இன்று தீவினை செய்யும் தீயோர் ஆயினர். தமிழகத்திற்கு நல்லவை செய்து புகழ் வாங்குவதே தமிழர் பண்பு இந்நாளிலோ தம் பெயரை வெளியுலகில் பரப்பித் தம்மை விளம்பரம் செய்துகொள்வதே மிக்க புகழ் என்று எண்ணுகின்றனர். இத்தகைய தமிழர்

'புகழ்எனின் உயிரும்
கொடுக்குவர் பழிஎனின்
உலகுடன் பெறினும்
கொள்ளலர்''

என்ற கடலுள் மாய்ந்த இளம் பெருவழுதியின் மொழியினை உள்ளத்தில் உளளிச் செயல் புரிவாராகில், தமிழரசு தழைக்கச் செங்கோலோச்சுபவராவர்.

இயற்கைப் பொருளைக் குறித்த ஒரு சொல்லை ஆய்வதற்கு இலக்கணம் வேண்டியதன்று. வினைச் சொல்லாயிருப்பின் பகுதி விகுதி தந்து பகுத்துக்காட்டலாம். இதற்கு இலக்கண முறைப்படிக்காட்டுகாட்ட வேண்டுமென்பவர் தொன்னூல் புலமையில்லாதவராவர். இலக்கியத்தில்தான் இலக்கணத்தைக் காண வேண்டும். எள்ளினின்று எண்ணெய் எடுப்பதுபோல், சங்க இலக்கியத்திலிருந்து இன்றமிழ்ச் சொற்களை எடுத்துக் காட்டுவது மொழியியல் வல்லுநர்க்கு உடன்பாடாம். கசடறக் கல்லாக் கயவர்களுக்குப் பொருந்தாதெனில் நமக்குக் கவலையில்லை.

ஆகவே ஈண்டு நம்பினோர்க்குச் சங்க இலக்கியங்களில் மிகுதியாகப் பயின்று வந்துள்ள வான்மதியை எடுத்து இயம்புதும். ஆரிய மொழியில் திங்களைக் குறிக்கும் மதி என்னும் சொல் இல்லை என்பதை அம்மொழியுடையாரும் மொழிகின்றனர். ஆனால் அறிவினைக் குறித்த மதி அவர்கள் இலக்கியங்களில் அருகி வந்துளது. தொன்னூலாகிய

— 7-ம் பக்கம் —

— 2-ம் பக்கத் தொடர்ச்சி —

தொல்காப்பியத்தில் அறிவைக் குறித்த மதி, 'மை' விகுதி பெற்று மதிமை என பண்புப் பெயராக வந்துள்ளது. எனவே இச்சொல்லும் தூய தமிழ்ச் சொல்லாகவே இருக்க வேண்டும்.

தொல்காப்பியம், பத்துப் பாட்டு, எட்டுத் தொகை ஆகிய பழந் தமிழ் நூல்களில் வந்துள்ள திங்களைக் குறித்த மதியையும் கீழே காண்க.

''புதுமை பெருமை
சிறுமை ஆக்கமொடு
மதிமை சாலா
மருட்கை நான்கே''

(பொருள், மெய்ப்பாட்டில் நூற்பா 251)

மதிமை சாலா மருட்கை என்றமையால் அறிவுடையார் இப்பொருட்கண் வியவார் என்று கொள்கை.

(இளம்பூரணம்)

நற்றிணை

பாட்டு 6 :

''குன்றுஊர் மதியம் நோக்கி''

-பாடியவர் இளங்கீரனுர்.

பாட்டு 196

''மால்பு இடர் அறியா,
நிறையுறு மதியம்''

-வெள்ளைக்குடி நாகனுர்.

பாட்டு 377

''அகல்இரு விசும்பின்
அரவுக் குறைபடுத்த
பசுங்கதிர் மதியத்து
அகல்நிலாப் போல''

-மடல்பாடிய மாதங்கீரனுர்.

பாட்டு 346

''நிறையுறு மதியின்
இலங்கும் பொறையன்''

-எயினந்தை மகன் இளங்கீரனுர்.

குறுந்தொகை

பாட்டு 315

''எழுதரு மதியர்
கடற்கண் டாஅங்கு
ஒழுகு வெள் அருவி
ஓங்கு மலைநாடன்''

-மதுரை வேளாதத்தன்.

ஐங்குறுநூறு

பாட்டு 487

''மதியுடை வலவ !-
ஏமதி தேரே''

-பேயனுர்.

பதிற்றுப் பத்து

நான்காம் பத்து

''மணிநிற மைஇருள்
அகல, நிலாவிரிபு
கோடுகூடு மதியம்
இயலுற் ருங்கு''

-காப்பியாற்றுக் காப்பியனுர்.

மூன்றும் பத்து

''எஃகு உறச்சிவந்த
ஊனத்து, யாவரும்
கண்டுமதி மருளும்
வாடாச் சொன்றி''

-பாலைக் கௌதமனுர்.

மூன்றும் பத்தின் பதிகம்.

'மதிஉறழ் மரபின்
முதியரைத் தழீஇ''

இரண்டாம் பத்து-பாட்டு-15

''யாணர்நல்நாடும் கண்டு,
மதி மருண்டனென்''

-குமட்டூர்க் கண்ணனுர்.

எட்டாம் பத்து-பாட்டு-73

''ஆங்கும் மதி
மருளக் காண் தவல்''

-அரிசில் கிழார்.

பரிபாடல்

பாட்டு : வரி

11 : 36-37

''மதிநிறைவு அழிவதின்,
வரவு சுருங்க
எண்மதி நிறை,
உவா இருள் மதிபோல''

13 : 5

''விண் அளி கொண்ட
வியன் மதி''

10 : 78

''மதிஉண் அரமகளென,
ஆம்பல் வாய்மடுப்ப''

11 : 1

''விரிகதிர் மதியமொடு,
வியல்விசும்பு, புணர்ப்ப''

10 : 76

''அரவுசெறி உவவு மதியென
அங்கையில் தாங்கி''

11 : 31

''நிறைமதி அலர்தரு பக்கம்''

3 : 52

''பிறைவளர் நிறைமதிஉண்டி''

கலித்தொகை

பாட்டு : வரி

15: 16-17

''தீம்கதிர் மதிஏய்க்கும்
திருமுகம்; அம்முகம்
பாம்புசேர் மதி போல''

17 : 7

''நீள்கதிர் அவிர்மதி
நிறைவுபோல் நிலையாது''

39 : 8

''வான்ஊர் மதியம்
வரை சேரின்''

121: 18

''நண்பகல் மதியம் போல்''

68 : 2

''மதிமொழி இடல்மாலை
வினைவர் போல்''

141: 7-8

''ஓரொருகால் உள்வழியள்
ஆகி, நிறைமதி
நீருள் நிழல்போல்,
கொளற்கு அரியள்''

மேலும் கலியுள் திங்களைக் குறித்த மதி வந்துள்ள பாட்டுக்களாவன :

பா. 55: வரி 10; பா. 56: வரி 4; பா. 62: வரி 14; பா. 64: வரி 1; பா. 100: வரி 4; பா. 104: வரி 27; பா. 105: வரி 46; பா. 118. வரி 6; பா. 119: வரி 4; பா. 126: வரி 2; 21; பா. 144: வரி 22; பா. 145: வரி 6; பா. 146: வரி 40; பா. 147: வரி 30; பா. 148: வரி 5.

— 8-ம் பக்கம் —

ராஜாபார்லி
பிஸ்கட்ஸ்
குழந்தைகளுக்கு சிறந்த ஆகாரம்
சங்குப்பிள்ளை, திண்டுக்கல்ரோடு, மதுரை.

"நோய்" பெற்ற குறள்கள்

கடந்த போட்டிகளைப் போலவே இப்போட்டியிலும் எண்ணற்ற தோழர்கள் பங்குகொண்டிருக்கின்றனர்; அறிய மெத்த மகிழ்ச்சி.

இப்போட்டியில் கவர்ச்சியாய் அமைந்தது ஒரு கேரளத் தோழியரின் ஈடுபாடு. தமிழைப் படிக்கவும் பேசவும் அறிந்த அத்தோழியர்க்கு தமிழை எழுதுதல் இயலாதாம். அதற்காக வருந்தி தான் திருக்குறளைப் படித்த விதத்தை எழுதி, குறள் எண்களைக் குறித்தனுப்பியுள்ளார். ஆனால் அவ்வளவும் மலையாள மொழி எழுத்துக்கள். எழுத்தின் பொருள் தெரியாது விழித்துக்கொண்டிருக்கையில், அலுவலகத்திற்கு வந்த மலையாள நண்பரொருவர் அதனைப் படித்து மொழி பெயர்த்தார். ''தென்றல்''லின் போட்டியில் கேரளத்தவரும் காட்டும் இவ்வார்வத்தைக் கண்டதும் எனக்கு மெத்த மகிழ்ச்சி. அத்தோழியரின் ஆர்வத்திற்குப் பாராட்டு! அவர் பெயர் சரோசா பால்ராசன்; ஊர் கண்ணனூர்.

''நோய்'' பெற்ற குறள்களைக் குறித்தனுப்பிய தோழர்களுள் சிலரின் பெயர்கள கீழே தரப்படுகின்றன. குறள்களின் எண்ணிக்கையும் பிற தோழர்கள் பெயர்களும் வரும் இதழில் வரும்.

சென்னை.

க. ச. கணேசன், ஆர். பிரேமா, வா. ராதி, க. வேணு பி. வி கோபால், ச. அநணன், தி. த. இராதாகிருட்டிணன், முத்தழகி.

திருச்சி மாவட்டம்

சீ. நடராசன் சீ. விசுவநாதன், கே. வி. கே. சாமி, ஆ. பன்னீர்ச்செல்வம், இரா. அன்பழகன், சி. சு. தேவராசன், அ. வே. காசிநாதன, க. துரையரசன், இராமையா, மு. கணேசன், ம. சந்தானம, ப. செல்வராசன், கலைச் செல்வி, சீ. நாராயணசாமி, துரை.பெருமாள், ப. ஆதவன், கே. ரத்தினம், பி. சுந்தரராசன்.

இராமநாதபுரம் மாவட்டம்

நா. கைலாசம், காட்பிரே, தே. ச. சபாபதி, இராம-சேது, ஞா. தாமஸ் நல்லதம்பி, வை சுப்ரமண்யம், சுப. சொ. கிருட்டிணன், மா. கோட்டைச்சாமி, வி. சிவப்பிரகாசம், எஸ். எஸ். பாண்டியனுர்,

திருநெல்வேலி மாவட்டம்

வை. சுப்பையா, ச இராமசாமி, இரா. கந்தசாமி, ச. சோமசுந்தரம், சு. சண்முகசுந்தரம், ப. அ. இசுமாயில், அரு. இளங்கோவேள் இராசன். எம். புல்லையா, சி. கந்தசாமி, அ. சா. பொன்னரசு,

தஞ்சை மாவட்டம்

சாமி, வையாபுரி, மு. சிதம்பரம், சு. வேதகிரி. நா. சண்முகம், வ. மாரிமுத்து, கோவி. இளந்திரையன், மு. மதிமாறன், அ. சேக் அலாவுதீன், இரா. பன்னீர்ச்செல்வன். இரா. சிவசிதம்பரம், ந. பக்கிரிசாமி, சண்மு க. நவநீதன், கோ இரங்கையன்,

தென் ஆற்காடு மாவட்டம்

இரெ. வடமலை, இரா. இளவழகன், இரா. உலகநாதன். இரா. இராமமூர்தி, பழனி, கே. சி. மூர்த்தி, மருமூர்த்தி, மா. முத்துச்சாமி, சி. நரேந்திரன், புதுவை. பாலமுனுசாமி, ''மலர்விழி'', மா. கோவிந்தராசலு, கே. கிருட்டிணசாமி, அர. இராசாராமன், தில்லை. செயராமன், பெ. மு. அர்த்தனுரி, சே. தனராசு, என். சுகுமாரன்.

சேலம் மாவட்டம்

மு. இரத்தினம், பழனியப்பன், பொ. கோவிந்தசாமி, கண்ணை உ. ச. வள்ளிநாயகம், கி. மாணிக்கம். இரா.சுபாசுசந்தர்,கிருட்டிணதேவன், கு. இரா. கோபால், தா. கா. முத்துச்சாமி, அ ந. சௌரி, க. இராமசாமி, சீ. வரதராசன், க. கணேசன், இரா. இராமசாமி, என் கே. கோவிந்தன், சிவம், எஸ். பழனி, தொ. தென்னவன்.

கோவை மாவட்டம்

ச. விடுதலை விரும்பி, இரா. கெட்டிமுத்து, சா. சதாசிவம், ஏ. பி. சண்முகம், கி. கந்தராசன், கு. வெ. முத்தையன், கா. நாச்சியப்பன், அ. சுந்தரம், சு அறிவானந்தம், சுப்பையன், தி. ப. சின்னப்பன், தென்னவன் மரகதம். சு. நல்லிறையனுர், இரா. பழனிச்சாமி, நெடுமாறன, இரா. நாதன். இரா. தங்கம், கருணை நடராசன்.

செங்கல்பட்டு மாவட்டம்

வி. ஏழுமலை. காஞ்சி மணிமாறன், எஸ். வரதன், எஸ். குப்புசாமி, பி. கே. சாமி.

வட ஆற்காடு மாவட்டம்

அ. சுந்தரேசன், கு. உருத்ரகோடி, டி. கே. இராமகிருட்டிணன், மோ. கி. மோகன, கோ. சங்கரன், கு. தேவராசன், வி. இராமகிருட்டிணன், இரா. செகநாதன், ப. சீ. நடராசன், இரா. தமிழ்ப்பித்தன், வே. நடராசன், குவலயன், ஏ. ஆர். சகசுரநாமம், மு தியாகராசன்.

மதுரை மாவட்டம்

ச. நடேசன், இரா. மா. மால்மதி, மா. முருகேசன். அ. வேலாயுதம், தெ. சு சந்திரா, வேம்பை இராமையா (பி. ஏ.) சு. சுப்பையா, சீ உக்கிரபாண்டியன், எம். ஆரோக்கியசாமி, இரா. சிவானந்தம், ஆ. வேங்கடநாராயணன், இளமாறன், வை. மாரியப்பன், பா. வயணப்பெருமாள், சு. சுப்பையா.

கன்னியாகுமரி

அரி. கோபால்.

மலைஞாலம்

சரோசா பால்ராசன்.

கருநாடகம்

மு. ரா. நரசிம்மன், ஆர். டபிள்யூ, கனகராசன்.

வெளிநாடு.

பம்பாய்

மா. வே. செல்லையா.

ஆமதாபாத்

துரைமுருகவேல், சி. கணேசன்.

இலங்கை

செ. சற்குருநாதன், செ. ச. நாதன், மு. சடாட்சரம்.

அறிவிப்பு

''தென்றல்'' பொங்கல் மலர் வரையிலும் வார இதழ் எட்டுப் பக்கங்களாகவே வெளிவரும் வாசக நண்பர்கள் பொறுத்தருள்க.

-பொறுப்பாளர்.

வழுதியின் உலா

சந்திரன் முளைக்கும் அந்தி வேளையிலும் வெண்குடை நிழலிருந்து குஞ்சரம் ஊர்ந்து, உலா வரும் பேரரசர்களை இலக்கியத்தில் கண்டிருக்கிறீர்கள். என் உலாவோ இப்படியில்லை. மன்னர்களுக்குச் சாமரம் வீசி, தங்கள் வயிற்றைக் கழுவப் புறப்பட்ட வணிகப் புலவர்கள், காசுக்காகப் பாடிய பாடல்கள் உலா என்ற பெயரில் வருகின்றன. நான் எழுதுவதும் காசுக்காக இல்லை. நையாண்டி நடைக்காரர்கள் பலரின் எழுத்தோவியங்களை அவ்வப்போது படித்திருக்கிறேன் பெர்னுட்சாவின் நூல்களை அதிகம் படிக்கும் வாய்ப்பில்லை. அவனது இரண்டு நாடகங்களைப் படமாகப் பார்த்திருக்கிறேன். அவை போக அவனது நூல்களில் வேறு சிலவற்றின் சில பகுதிகளைப் படித்திருக்கிறேன் நல்ல கிண்டல்; சரளமான நடை; கட்டாயம், அவன் எதிர்பார்த்த வெற்றி கிட்டத்தான் செய்திருக்கிறது. அரசியல் பிரச்னையையும் ஊடுடே அவன் எப்படிக் கிண்டல் செய்கிறுன் ?

கிடக்கட்டும் அவன் கதை. ஒட்டக் கூத்தன் என்றே, பல்லை உடைக்கும் கூத்தன் என்றே, எவனே ஒருவன் இருந்து இறந்து போனுனும். போனவன் சும்மா போகவில்லை. உலா என்ற சொல் தன் பெயரோடு நிலை நிற்பதற்கானவற்றைச் செய்துவிட்டுப் போனுன். அவன் அந்தச் சொல்லை வைத்துவிட்டுப் போனதாலோ என்னவோ-நானும் உலாப் புறப்பட்டுவிட்டேன்.

என் உலா சில வேளைகளில் செய்தித்தாள் வீதிகளில் நடக்கும். வேறு சில வேளைகளில் சமூகச் சந்துகளில் செல்லும். கற்பனை வழியிலும் செல்வேன். அங்கங்கே பல பேர்வழிகளைக் காண்பேன்.

அரசியலில் தங்களைக் கொம்பர்கள் என்றும், பாடல்களில் தங்களைக் கம்பர்கள் என்றும் கொடிபோட்டுக் கொண்டு ஆடுகின்றவர்களைக் காண்பேன். துண்டை விரித்துப் போட்டுவிட்டு நாக்கைத் தொங்கப் போட்டுக் கொண்டு முச்சந்தி புராணம் பாடும் சோற்றுப் படைகளையும் பார்ப்பேன். உண்மையின் நலம் நாடும் இயக்கச் செல்வர்களையும் கண்டு வணங்குவேன். இவர்களையெல்லாம் உங்கள் பார்வையில் படவைப்பதே இந்த உலாவின் நோக்கம். இதை எப்படி நீங்கள் வரவேற்கிறீர்களோ, அதைப் பொறுத்து அடிக்கடி சந்திப்பேன்.

ஃ ஃ ஃ

எதிர்க்கட்சிக்காரன் எதைச் செய்தாலும் இந்தக் "காசுமீர் மைனர்"களுக்கு எரிச்சல்தான். நகரை அழகுபடுத்த - சுகாதாரமுள்ளதாக்கப் பணம் தேவைப்பட்டதால் நாம் பிரயாண வரி கொண்டுவர முனைந்தபோது சீறிப் பாய்ந்தன, சில பட்டாளங்கள். கேரளாவிலும் இப்படி ஒரு சிக்கல். பொதுவுடைமையர் கேரளாவில் ஆட்சியிலிருந்தபோது உழவர் நலனுக்காக நிலச் சீர்திருத்த மசோதாவைக் கொண்டுவந்து தம் ஆட்சி நாளிலேயே நிறைவேற்றிவிட்டனர். அப்போது சும்மா இருந்தார் பந்த். பொதுவுடைமையர் அத்தியாயம் முடிந்து பல நாளானபின் இன்று, அந்த நிறைவேற்றப்பட்ட மசோதாவில் குற்றம் கண்டுபிடித்துத் திருத்தப் போகிறுர்களாம் தில்லி வாழ் "காசுமீர் மைனர்கள்". நேரு மாமாவே இந்த மசோதாவைப் படித்துப் பார்த்துவிட்டு, ஒப்புதல் தந்திருக்கிறுர் முன்பு. பின்தான் மசோதா நிறைவேற்றப்பட்டது. "இப்போது திருத்த வேண்டியதேன்? நேருவே படித்துப் பார்த்து ஒப்புதல் அளித்தாயிற்றே!" என்று பாராளும் மன்றத்தில் ஒருவர் கேட்டதற்கு, "பிரதமர் நேரு அம்மசோதாவின் ஒவ்வொரு பிரிவையும் ஆராய்ந்து பார்க்கவில்லை" என்றுராம் பந்த்.

மசோதா தன் கைக்கு வந்தபோது ஆராய்ந்து படித்துப் பார்க்காமல் எங்கே போயிருந்தாராம் நேரு? பந்தோடு பந்தாடப் போயிருந்தாரா? நிம்மியோடு கும்மியடிக்கப் போயிருந்தாரா? எங்கே போயிருந்தார்?

ஃ ஃ ஃ

"வருமானம் போதவில்லை; போதவில்லை!" என்ற ஓலம் ஒருபக்கம். "வரி மேலும் மேலும் போடுங்கள்!" என்று மௌனகுருவின் அருள்மொழி ஒருபக்கம். போட்ட வரியையே ஒழுங்காக ஈட்டத் தெரியாதவர்கள் புது வரி போட்டென்ன? பச்சை நோட்டடித்தென்ன? ஓட்டை வாளியை வைத்து ஓராயிரம் தடவை இறைக்கும், சில மந்த மனிதர்கள் இந்தக் கிழமை பார்வையில படுகின்றனர். கான்பூர் நூலாலை முதலைகள் இன்னும் 4 கோடியே 80 இலட்சம் ரூபாய் வரி கட்டவில்லையாம். இதில் சில நிலுவைகள் 1947-48-ம் ஆண்டிலிருந்து நிற்கின்றனவாம். இவர்களிடம் காலத்தே வரியை வாங்காது விட்டு வைத்தது ஏன்? தெரியவில்லை அந்தச் சேதி. "அவர்கள் அரசுக்கு வரி கொடுத்தாலும் கொடுக்காவிட்டாலும், காங்கிரசுக்கு நன்கொடை கொடுக்கிறுர்களே! அது போதாதா?" என்று எண்ணிக் கண்டிப்பான நடவடிக்கைகள் எடுக்காதிருக்கலாம் தில்லிவாழ் காசுமீர் மைனர்கள். இந்த ஊரைச் சார்ந்தவர்தான் முந்திரா என்ற ஆலை முதலாளி என்பதைச் சொல்ல வேண்டியதில்லை.

எப்படியோ தொலையட்டும், மக்கள் அடுத்த சுற்றுப் பயணம் எந்த நாட்டில் என்று திட்டம் போடட்டும் "காசுமீர் மைனர்!"

ஃ ஃ ஃ

பத்தமடைக்காரர்கள் பாய் பின்னுவதில் பெயர் போனவர்கள். அதே நேரத்தில் திறமைக்கேற்ற ஊதியமின்றிப் பசியால் உயிர் போனவர்கள். அவர்கள் எலிசபெத் அரசிக்குப் பாய் தந்திருக்கிறுர்கள். இப்போது ஐக்குக்குப் பாய் தரப்போகிறுர்களாம். ஆமாம்...இவ்வளவு பேருக்குப் பாய் தருகிற இவர்களுக்கு எவராகிலும் சோறு தந்திருக்கிறுர்களா? அது "தில்லிவாழ் காசுமீர் மைனர்களுக்கும்" அன்னுர் சேவடி தாங்கும் நாவடித் தலைவர்களுக்குந்தாம், அது வெளிச்சம்.

-மா. பாண்டியன்

மதுரையில் மாணவர் படை

பொன்னுவேலு



சோமசுந்தரம்

புரட்சி வெடித்தது என்பார்கள். புதுமை கிளர்ந்தது என்று வர்ணிப்பார்கள்.

அறிவுலகம் அணிவகுத்தது. தடந்தோள் மறவர் படையெடுத்தினர். வேங்கை நிகர்த்த நெஞ்சத்தினர் வேழமெனத் திரண்டனர். சாடும் புயலை எதிர்த்தனர், புது சரித்திரம் பாடும் இளையோர்.-இப்படியெல்லாம் இலக்கியம் ஒலிப்பதையும் மேடைகள்முழங்குவதையும் கண்ணுரக் கண்டிருக்கிறேன்; காதாரக் கேட்டிருக்கிறேன். ஆனல் இத்தகு வியத்தகு காட்சிகளைக் கண்ணுரக் காணவும், மகிழவும் ஆன வாய்ப்பு அண்மையில் எனக்குக் கிட்டியது

தமிழ் பாடும் வையையின் கரையிலே தடந்தோள் மறவர் பலர் ஆர்த்தெழுந்து நின்றனர். மருப்பொடிய, மதம் பொழிய, பகை இடிப்பொடிய, இதயம் கிழிய, "எங்கே பகைவர்; எங்கே வடவர்?" என்று போர்ப்பாட்டுப் பாடிய வேழங்களைக் கண்டேன். நிச்சயம் நம் நாடு விடுதலைபெறமுடியும் என்று உறுதி கொண்டேன்.

ஆம்! ஆம்! சிந்தை குளிர்ந்திட, சீர்மிகு திராவிடம் கிடைத்திட, சிதையாது நம் பெருமை நிலைத்திட மதுரை மாவட்ட மாணவர்கள் தம் முதல் மாவட்ட மாநாட்டைக் கடந்த 29-11-'59 அன்று சிறப்பாக நடத்திக்காட்டினர். அதைக் கண்டபோதுதான் விடுதலை நமக்கு முயற்கொம்பில்லை என்றுணர்ந்தேன். தெருவெங்கும் தோரணங்களும் கொடிகளும் அசைந்தாடி வரவேற்றன. இராமநாதபுரம் சாலையில் நுழைந்ததும் வண்ண வளைவு கோட்டை வாயில்போல் நின்று நல்வரவு கூறியது. தாயகத்தின் தன்னுட்சி மண்டபத்திற்குள் நுழையும் பெருமை பெற்றேம் நாங்கள். ஏ. வி. எஸ். எஸ். அரிசி ஆலை வளைவில் அமைக்கப்பட்டிருந்த திடலுக்குள் நுழைந்ததும் வரவேற்றது, கோலத்துடன் திகழ்ந்த பேராசிரியர் சண்முகம் பந்தல். தருமாம்பாள் பெயருள்ள அரங்கில் தலைவர்கள் அமர்ந்திருந்த காட்சி, முடியுடை வேந்தர்கள் சேர்ந்திருந்ததுபோல இருந்தது.

பிறபல இயக்கங்களின் மாணவர் மாநாடு பார்த்திருக்கிறேன். வாழ்வின் எல்லைக் கோட்டை நோக்கிச் சென்று கொண்டிருப்பவர்கள், அம்மாநாட்டிற்கு வரும் அமைச்சரின் தயவை எதிர்நோக்கி சென்று கொண்டிருப்பார்கள். நெஞ்சத்தில் இழிவும் செயலில் ஊழலும் கொண்டோர் கையில் மாலையும், வாயில் புன்னகையும் கொண்டு வந்திருப்பர். மந்திரிக்கு அவற்றைத் தந்து மகிழ்வர்.

மற்றெருபுறம் அகில உலக கண்ணேட்டத்திற்கு, கண்ணற்ற இந்நாட்டின் மாணவர்கள் அழைத்துச் செல்லப் படுவார்கள்.

வேறு சிலர் மதவேழங்களாய் வரும் மாணவர்களை மருளும் எலிக்குஞ்சு ஆக்கும் "பிரசங்க சூரணம்" தருவார்கள்.

இவர்களெல்லாம் மாணவர்களுக்கும் அரசியலுக்கும் தொடர்பு கூடாது என்று சொல்லிக்கொண்டே மாணவர்கள் மேடையில் அரசியலைக் "கிழித்து நொறுக்குவார்கள்."

இந்தப் பிழைபாடுகள் எதுவுமில்லாமல் மாணவர்களே மாணவர்களுக்காக மாணவர்களிடையே நடத்திய அழகான மாநாடாக மதுரை மாநாடு நடந்தது. பேச்சாளர்கள் அனைவரும் மாணவர்கள். பேசப்பட்டவை அனைத்தும் மாணவரின் தாய்நாட்டுத் தொண்டுகள். சென்னை மாநிலமாணவர் மாநாட்டிற்குபின்னர் முதலாவதாகக் கூடும் மாணவர் மாநாடு இது.

மதுரை, மேலூர், போடி, உசிலை, தேனி, திருமங்கலம். பண்ணைக்காடு. திண்டுக்கல், பழனி, உத்தமபாளையம், கம்பம் முதலிய பல ஊர்களிலிருந்தும் பிரதிநிதிகள் வந்து இம்மாநாட்டில் கலந்துகொண்டனர்.

விருதுநகர் காரைக்குடி, நெல்லை, நாகர்கோவில் முதலிய இடங்களிலிருந்து பல கல்லூரி மாணவர்கள் வந்திருந்து பங்கு கொண்டனர்.

தோழர் வெற்றிவேந்தன் தலைவரை முன் மொழிந்தார். காமராசு, கோ. சாமி, ப. நெடுமாறன், கோவை-செழியன், டி. கே. பொன்னுவேலு, என். வி. என். சோமு முதலியோர் வழி மொழிந்தனர். தலைவர் கே. ஏ. கிருட்டிணசாமி தலைமையேற்று அழகிய பல கருத்துக்களைச் சொன்னுர். அதனைத் தொடர்ந்து எண்ணற்ற மாணவர்கள் தமது இன உணர்வையும் மொழி நலனையும் குழைத்துத் தந்தனர்.

திறமையும், பொறுப்பும் உள்ள தோழர் கிருட்டிணசாமி எதிர்காலத்தின் பொன்னுன காட்சிகளை வருணித்துரைத்ததை விரித்துரைப்பதா? இந்தி மொழியின் வெறிச்செயலை எதிர்த்தழிப்பேன் என்று முழங்கிய திறப்பாளர் பி. எஸ். மணியனின் முழக்கத்தைப் படம் பிடித்துக்காட்டுவதா? நாவல்ல காமராசரை மேடைக்கு இழுத்துவந்த போடி-காமராசின் நையாண்டியை எடுத்துச் சொல்வதா? திண்டுக்கல் அழகிரிக்குத் தெரிந்த நயங்களெல்லாம் மணம் வீசும் மலர்களாக விரிந்ததை வரைவதா? முக்குளம் தவசியின் நடைமுறைப்பேச்சை எடுத்துச்

கிருட்டினசாமி

— 8-ம் பக்கம் —

உத்தரப்பிரதேசப் பழங்குடிகள்

இந்தியாவில் இன்னும் இருண்ட குடிகள் இருக்கின்றன. இந்தியாவில் இருண்ட குடிகளா? அப்படி என்றால் என்ன? பலருக்கு இந்த ஐயம் எழலாம். பொதுவாக ஆப்பிரிக்காவைத்தான் இருண்ட கண்டம் என்று அழைப்பதுண்டு. அங்குள்ள மக்களைப்போல இருண்ட வாழ்க்கை நடத்தும் இனம் இந்தியாவில் சிலவுண்டு. உத்தரபிரதேசத்தில் உள்ள மிர்சாபூர் காடுகளில் வசிக்கும் 'துதி'க் குடிகளும் இந்த இருண்ட குடிகளுள் ஒன்று.

எளிமையும் பண்பும் கலந்து காணப்படும் இந்த மக்களின் வாழ்க்கை அமைப்போ ஒரு புதுமையாக இருக்கிறது.

காடுகளுக்கும் மலைகளுக்கும் இடையில் உண்டு உறங்கும் இவர்கள் கழனி வாழ்க்கையை நல்ல முறையில் பயன்படுத்தி அறியமாட்டார்கள்.

ஏழ்மையுடன் தோழமை கொண்டு வாழ்ந்தார்கள். மரங்கள்தான் இவர்களுக்கு மாளிகை. இலைகளும் தழைகளும் பசியாற்றும் மருந்து.

இப்படி வாழ்ந்த மக்களிடம் 1857 ல் ஒரு மாற்றம் ஏற்பட்டது.

பக்கத்தில் இருந்த பீகார் மாநிலத்தைச் சேர்ந்தவர்கள் இங்கு வந்து குடியேறினார்கள். பழங்குடிகள் வாழ்ந்த இடத்தைப் புதிதாக வந்தவர்கள் மிக எளிதாகப் பிடித்துக் கொண்டனர். வணிகம் செய்தார்கள். பணம் கடன் கொடுத்தார்கள். இப்படியாகப் பழங்குடிமக்களை நன்றாக மயங்கவைத்துப் பெரிய மனிதர்களானார்கள்.

பணத்தை கண்ட துதிகள் தேன் உண்ட நரியாகிப் பழைய நிலைமறந்து ஆடம்பர வாழ்க்கை நடத்தினார்கள். விழாக்களில் பணத்தைத் தண்ணீராகச் செலவழித்துக் கடன்பட்டனர். சுருங்கச் சொன்னால், செலவு செய்யாதவனுக்கு அங்கே மதிப்பில்லை என்ற நிலைமை உருவானது.

அவர்கள் நிலையை நன்றாக உணர்ந்த பணமூட்டைகள், ஏராளமாகக் கடன் கொடுத்துக் கடன் சுமையை ஏற்றினார்கள்.

கொள்ளை வட்டி, துதிகளைத் திணற வைத்தது. ஒரு சிலர்தான் வாங்கிய கடனைத் திருப்பிக்கொடுக்க முடிந்தது. கொடுக்க முடியாதவர்கள், பணம் வாங்கியவனிடம் போய் "நான் உன்னுடைய குமியா" என்று சொல்வான். இப்படிச் சொல்லிவிட்டால், அன்றிலிருந்து அவனும், அவன் குடும்பமும் அடிமைகளாகக் கருதப்படுவர். கடன் கொடுத்தவன் வீட்டு வேலைகளையும், வயல்வேலைகளையும் 'குமியா' செய்யவேண்டும். இரு ஆண்டுகளுக்கு ஒருமுறை அவனுக்கு ஒரு துண்டுத்துணி கொடுக்கப்படும்.

முதலாளிக்கு உழைத்து உழைத்து மாயும் அந்தக் 'குமியா' பணம் சேர்க்கவும் முடியாது. கடனை அடைத்து விடுதலை அடையவும் முடியாது. புதைகுழியில் அகப்பட்ட யானைபோல அவர்கள் வாழ்க்கை, பணமுதலைகளிடம் சிக்கிச் சீரழிந்தது.

முதலாளிகள் மட்டும் அல்ல. அவர்களிடம் வேலை பார்க்கும் "முனிம்" என்று அழைக்கப்படும் கணக்கர்களும் துதிகளை வாட்டி வதைப்பதில் இன்பம் கண்டார்கள். ஏதும் அறியாத மக்களைச் சித்திரவதை செய்வதில் அவர்களுக்குத் தனி மகிழ்ச்சி. கீழே காணும் நிகழ்ச்சி இதற்கு ஒரு சரியான விளக்கமாகும்.

ஒரு கணக்கனின் செருப்புகளைக் காணவில்லை. உடனே அடிமைகளைக் கூப்பிட்டு அவர்களை எரியும் எண்ணெய்க்கொப்பரையில் கையை விடச் சொன்னான். எண்ணெய் சுடாவிட்டால் அவர்கள் குற்றமற்றவர்களாம். எப்படி சோதனை? பாவம் அந்த பரிதாபப் பிறவிகள் எண்ணெயில் கையை விட்டு துடி துடித்தார்கள். அப்போது ஒரே ஓர் அறிவாளி வந்து கணக்கனைப் பார்த்து "ஏனப்பா செருப்பைத் தொலைத்ததற்கு என்ன சாட்சியம் இருக்கிறது? கொதிக்கும் எண்ணெயில் கையை விட்டு அதை உறுதி செய்துவிடு, பார்க்கலாம்" என்றான். கணக்கன் ஏன் அங்கே நிற்கிறான்! வெற்றியோடு பின்வாங்கி விட்டான்.

இப்படி எத்தனையோ உண்டு. வாழ்க்கையில் ஏற்பட்ட இந்த இன்னல்களும், எதிர்ப்புகளும் மனிதர்களைக் கண்டாலே அவர்களைப் பயப்பட வைத்தன.

நாடு வெள்ளையனிடம் இருந்து விடுபட்டபோது இந்திய அரசாங்கம் 'அடிமை' முறையைச் சட்ட விரோதமாக்கியது. துதிகளில் ஏழ்மை ரத்தத்தை உறிஞ்சிக் கொழுத்து இருந்த பண அட்டைகளுக்கு இதைப் பொறுக்கமுடியவில்லை. சட்டத்தைத் தடுக்க முழு முயற்சி செய்தார்கள். துதிகளின் மூடநம்பிக்கையை பயன்படுத்திக்கொண்டு 'அரசாங்கம் உங்களில் ஒருவனைப் பலிகொடுக்கப் போகிறது' என்று பயமுறுத்தினார்கள். துதிகளின் பொருளாதாரத்தைப் பற்றி ஆராய அரசாங்கம் ஒரு குழுவை அனுப்பியது. அந்த குழு போய் பார்த்தபோது, துதிக்குடியைச் சேர்ந்த ஒருவனைக்கூட அவர்களால் காணமுடியவில்லை. முந்திய நாள் இரவே அவர்கள் தங்கள் இடத்தை விட்டு ஓடிவிட்டார்கள். அந்த அளவுக்கு துதிகள் பயமுறுத்தப்பட்டு இருந்தார்கள்.

1952 ல் சமுதாய வளர்ச்சித் திட்ட அலுவலர்கள் காட்டுக்குள் போய் இந்த மக்களின் நிலை அறிய எண்ணினார்கள் அவர்கள் உடையைக் கண்டவுடன் துதிகள் ஓடிப் போய் மரத்தில் உட்கார்ந்துகொண்டார்களாம். அலுவலர்களின் பார்வையில் இருந்து தப்ப அவர்கள் தூங்காமலே இருந்தார்கள். இவைகளெல்லாம் துதிகளின் அறியாமையைக் காட்ட ஒரு சில எடுத்துக் காட்டுக்கள்.

துதிக்குடியில் பல வகுப்புகள் உண்டு பணிக்கர், பதாரி, பனியா, கோல்வர் ஆகிய அவைகளில் சில.

இந்த மக்கள் இயற்கையை எல்லாக் கோணங்களிலும் வழிபடுகிறார்கள். மரத்தை வணங்குகிறார்கள். உயிரற்ற மரத்துக்கு பறவையும், மிருகமும் பலி கொடுக்கப்படுகின்றன. மதுவைத் தாராளமாக அருந்துகிறார்கள்.

திருமண வழக்கம் வகுப்புக்கு வகுப்பு மாறுபடுகிறது. ஆனால் பரிசப் பணம் வாங்குவது மட்டும் எல்லோருக்கும் பொதுவாக இருக்கிறது.

இசையும் நாட்டியமும் இவர்கள் வாழ்க்கையில் நல்லதொரு பங்கு வகிக்கின்றன. இந்தக் கலைகளில் தனி ஆர்வம் காட்டுகிறார்கள்.

இவர்கள் ஆடும் கிராமிய நாட்டியம் அழகும் கவர்ச்சியும் நிறைந்தது. பெண்களும் ஆண்களும் சேர்ந்து 'கர்மா' என்று ஒரு நாட்டியம் ஆடுகிறார்கள். கர்மா எனும் மரத்தைச் சுற்றி இந்த நாட்டியம் ஆடப்படுகிறது.

இந்த நாட்டியத்தில் ஆண்களும் பெண்களும் சமமாக நிற்கிறார்கள். தலைவனாக ஒருவன் இருக்கிறான். அவன் மணிகள் கட்டிய கயிறு வைத்திருக்கிறான். 'மனர்' என்ற முரசை அடித்துக்கொண்டு 'குங்ரங்' என்று ஒருவகை பாடலைப் பாடி உணர்ச்சி ஊட்டுகிறான்.

இந்த கர்மா நாட்டியத்தைப்பற்றி ஒரு சுவையான கதை சொல்லப்படுகிறது.

ஐந்து சகோதரர்கள் இருந்தார்கள். நான்கு பேருக்குத் திருமணம் ஆகிவிட்டது. ஒருநாள் அவர்கள் வயலில் வேலைக்கு சென்றுவிட்டார்கள். இளையவன் மட்டும் வீட்டுமுன் இருந்த 'கர்மா' மரத்தைச் சுற்றிப் பாடி ஆடினான். அவனோடு அண்ணன் மனைவியரும் ஆடினார்கள். ஆட்ட உற்சாகத்தில் கணவர்களுக்கு உணவு எடுத்துச்செல்ல மறந்து விட்டார்கள். இதனால் ஆத்திரம் அடைந்த கணவர்கள் வீட்டுக்கு வந்தார்கள். விளைவு—தம்பி, வீட்டைவிட்டு வெளியேறினான். நாட்டியப்பள்ளி ஆரம்பித்துப் பணக்காரனானான். மற்றவர்கள் வறுமையிற் சிக்கிப் பிச்சை எடுத்தார்கள் இந்த நிலைமையில் தம்பி அண்ணன்மார்களைச் சந்தித்தான். மறுபடியும் இணைந்தார்கள். அவர்கள் இணைந்ததைக் குறிப்பதுதான் 'கர்மா' நாட்டியமாம்.

எழிற்கலையும் அத்தோடு இன்னல்களும் கலந்து இருந்த துதிக்குடிகளின் வாழ்க்கையில் இப்போது மாறுதல் ஏற்பட்டு இருக்கிறது. கொடுமைகள் நிறைந்த வாழ்க்கைப் பாதையை அநேகமாகக் கடந்துவிட்டார்கள். 'குட்டி ஆப்பிரிக்கா' என்று அழைக்கப்பட்ட இடம் இப்போது புன்னகைப் பூங்காவாகத் திகழ்கிறது.

-பசுங்கிளி

திருத்தம்

இவ்விதழின் நடுப்பக்கங்கள் சில பிரதிகளில், "பக்கம் இரண்டு, பக்கம் ஏழு" என்று அச்சாகியுள்ளன. அவற்றை முறையே **பக்கம் நான்கு, பக்கம் ஐந்து** என்று திருத்திக் கொள்க.

விற்பனையாளர்களுக்கு

'தென்றல் பொங்கல் மலர்' தேவையான பிரதிகளுக்கு கமிஷன் அணா 8, நீக்கி பிரதி ஒன்றுக்கு ரூ 1-8-0 வீதம் பூராத் தொகையும் 30-12-59ம் நாளுக்குள் அனுப்பி வைக்க வேண்டும். முன்பணமின்றி கண்டிப்பாக மலர் அனுப்பி வைக்கப் படமாட்டாது. மணியார்டர் கூப்பனில் பொங்கல் மலருக்காக என்று குறிப்பிட்டு எழுதுங்கள். மலர் தேவைக்கு முன் கூட்டியே தெரிவிக்கவும். **பொறுப்பாளர்**

— 8-ம் பக்கத் தொடர்ச்சி —

பொறுமைக்குன்றும், திறமை மாமலையும் ஆன பொதுச் செயலாளர் சோமசுந்தரத்தின் உரையிலே கழக வரலாறும் கட்டுப்பாட்டின் சிறப்பும் எழுந்துவந்தனவே, அவற்றைச் சொல்வேனா?

எதைச் சொல்வேன்! எல்லாம் சொல்ல ஆசைதான். ஆனால் திளைத்த நெஞ்சம், திளைத்தபடி திளைத்துக்கொண்டே இருக்கிறது. கண்ட கண்கள் அதையே திருப்பத் திருப்பக் கண்டுகொண்டிருக்கின்றன எதைக் கண்டும் நிறைவுறாத என் நெஞ்சம் அன்றுதான் நிறைவுற்றது.

திராவிடர் கழகமாக இருந்தபோது நம் மாணவர்கள் மதுரையிலே மாநாடு கூடி இருக்கின்றனர். முன்னேற்றக் கழகமாக நாம் எழுந்தபின் மதுரையிலே மாணவர் மாநாட்டைக் கூட்டப் பலகாலம் முயன்றுவந்த தோழர்களின் ஆசைக்கனவு அன்று நிறைவேறியது அந்த பெருமகிழ்ச்சியில் அன்று கலந்து கொண்ட தி. மா. மு. க பொதுச் செயலாளர் எஸ். டி. சோமசுந்தரம் அவர்கள், மதுரை மாணவர்களை, ஆர்வமிக்க இளஞ் சிங்கங்களை, ஆற்றல் மிக்க மத வேழங்களை, நெஞ்சார வாழ்த்தினார்கள். மதுரை மக்களும் வாழ்த்தினார்கள். அவர்களோடு நாமும் சேர்ந்து வாழ்த்துகிறோம். வாழ்க! வாழ்க! வலிவுள்ள திராவிட நாட்டை விரைந்தே பெற்று ஆள்க! ஆள்க!

அல்லும் பகலும் அயராது உழைத்து வெற்றியை ஈட்டிக் காட்டிய சொல்லும் செயலும் வல்ல இந்திரசித் வரவேற்புக்குழுக் தலைவர் என்ற சொல்லுக்கே தனிச் சிறப்பைத் தேடித் தந்தார்கள். திறல் மிக்க சீனிவாசன், நெஞ்சு உரமிக்க வெற்றி வேந்தன், கமழும் புகழின் தமிழ்ச் செல்வன், கொள்கையுணர்ந்த கோ. சாமி வெல்லும் வகையறிந்த இராசேந்திரன் முதலிய செயலாளர்களையும். காலத்தைப் பொன்மணியாகக் கருதி உழைத்த பொருளாளர் புகழ் மணியையும். மாணவர் உலகம் வாழ்த்துகிறது.

தீர்மானங்கள் பல, தோழர்களால் நிறைவேற்றப்பெற்றன.

இடைவேளை ஏதுமின்றி நடந்தேறிய இம்மாநாட்டின் பிரதிநிதிகளுக்கு மதிய உணவை மதுரை அண்ணா படிப்பகத்தார் அறுசுவையுடன் வழங்கினர்.

-கண்டுவந்தோன்.

—1-ம் பக்கத் தொடர்ச்சி—

அழகையும் சொல்லுதற்கு இல்லையென்பதும், மனக் கற்பனையால் ஓவியம் தீட்டிய படத்திலே காணப்படும் மங்கை யழகு அவளழகு என்பதும் அறியப்படுகின்றன. கைவல்லான் செய்த பதுமை யுருவிலே காணப்படும் அழகு அவள் அழகு என்பதும்-நடமாடுகிற, வேலை செய்கிற, உயிரோடிருக்கிற பதுமையோ சித்திரமோ உண்டானால், அஃது அவள் உருவம் என்பதும் இவ்விரண்டு அடிகளில் எவ்வளவு நுட்பமாக உணர்த்தப்படுகின்றன!

"சுவரில் எழுதலாம்
சித்திரம்போற் காணலாம்
படத்தில் எழுதலாம்
பதுமைபோற் பார்க்கலாம்"

இவ்வடிகளை நாட்டுப்புற மக்கள் வழங்குவதை இன்றுங் காணலாம். இதைபபோன்ற நாட்டுப் பாடல்களில்,

"தங்கத்தைக் காய்ச்சி,
தரையிலே விட்டாற்போல்
பொன்னை யுருக்கிப்
பூமியிலே விட்டாற்போல்"

என்று ஒருவருக்கொருவர் உகந்துகந்து பேசுவதைக் காணலாம். நல்ல நிறத்தோடு மஞ்சளைப் பூசிக் கொண்டு தோன்றுகின்ற மங்கையர்க்கு இதைவிட வேறு என்ன உவமை சொல்லமுடியும்?

ஒருவர் பேசாது இருக்கிற நேரத்திலே பேசும்படி செய்வதற்குச் சிலர் முயல்வது உண்டு. அந்நேரத்தில் அவர்கட்கு ஒரு நாட்டுப்பாடல் பயன்படுவது உண்டு.

"வாயைத் திறவாயோ
மறுவார்த்தை சொல்லாயோ
முத்தான வாய்திறந்து
உத்தாரஞ் சொல்லாயோ
தானைத் திறவாயோ
தனிவார்த்தை சொல்லாயோ"

இப்படிப் பாடுவதால் ஒருவர் மற்றொருவருடைய கோபத்தை மூட்டுவதில்லை. ஆனால் மற்றவருடைய வாயிலே வயிரம், முத்து, தங்கம் இவை இருக்கின்றன என்ற குறிப்புப்படப் புகழ்வதாலும், அவை உதிர்ந்தாற் பொறுக்குதற்குக் காத்திருக்கிறேன் என்ற குறிப்புக் கொண்டு தன் தாழ்வு தோன்றக் கூறுவதாலும், அவர் 'இங்கே முத்தும் இல்லை; வயிரமும் இல்லை' என்று சொல்லவாவது வாய் திறந்துவிடுவது இயல்பு.

அழகுள்ள நங்கை ஒருத்தியை ஒருவன் காதலிக்கிறன்; மனப்பூர்வமாகக் காதலிக்கிறன். அவளையன்றி வேறு எவரையும் மணந்துகொள்ள அவனுக்குக் கொஞ்சங்கூட விருப்பமில்லை. மணந்தால் அவளை மணப்பது, இல்லாவிட்டால் இறப்பது, இறந்தாவது மறு பிறப்பில் அவளையடைவது என்று எண்ணுகிற அவன் தன் காதலை எப்படித் தெரிவிப்பான்?

"நான்,
செத்து மடிந்தாலும்
செலவழிந்து போனலும்
செத்த இடந்தனிலே
செங்கழுநீர்ப்பூ பூப்பேன்;
மாண்டு மடிந்தாலும்
வைகுந்தஞ் சேர்ந்தாலும்
மாண்ட இடந்தனிலே
மல்லிகைப்பூ பூப்பேன்;
பஞ்சணை மெத்தையிலே
படுக்கைமலர் ஆவேன்யான்"

என்று தெரிவிக்கிறன். இறந்து போனலும், பூவாகப் பூத்து அவன் மெத்தையிலே, அவள் கூந்தலிலே வந்து தங்குவதற்கு முயல்வேன் என்று கூறும் வகையில், தனது அளவிலா அன்பினைப் புலப்படுத்தினவன் ஆகிறன். அவள்மீது வைத்த மட்டிலாக் காதல் காரணமாக, பொல்லாத சாதலைக்கூட நல்லதாக அவன் மதிக்கிறன் என்பது மாத்திரமின்றி, அஃறிணைப் பொருளாய்ப் பூவாகக் கூடப் பிறக்கத் தயாராக இருக்கிறன் என்பது மாத்திரமின்றி, உயிரற்ற துணியாய்ப் பொட்டாய் மையாய் முள்ளாய்க்கூட மாறக் காத்திருக்கிறன் என்றல், அவனுடைய காதலை என்னென்பது!

"கொண்டைக்குப் பூவாவேன்
கொசகத்திற் பையாவேன்
நெற்றிக்குப் பொட்டாவேன்
நீலவிழி மையாவேன்
முன்றனைத் தொங்கலிலே
முள்ளாகி ஓட்டுவேன்யான்
காலுக்கு மெட்டாவேன்
கைவளையல் தானவேன்"

என்று கூறுவது ஒரு நாட்டுப்பாடல்.

மணப்பந்தல் போடுவதைக் குறித்து ஒரு நாட்டுப் பாடலுண்டு. அந்தப் பாட்டிற் சொல்லுகிறபடியே காவணம் போடப்படாவிட்டாலும், எவ்வளவு தூரம் மனக்கற்பனை உண்மையே போலச் செல்கிறது என்பதை அறியவும், இந்நாட்டுப் பாடல்கள் எவ்வளவு சொல்லழகு வாய்ந்தவை என்பதைக் காணவும் அப்பாட்டைப் பார்ப்போம்.

"முத்தைப் பிளந்தார்கள்
மூன்றுங்கால் இட்டார்கள்
பவளம் பிளந்தார்கள்
பந்தக்கால் நட்டார்கள்
வெள்ளியாற் கால்நிறுத்தி
வெற்றிலையாற் பந்தலிட்டார்
கரும்பாலே கால்நிறுத்தி
அரும்பாலே பந்தலிட்டார்
ஈர்க்குப் பிளந்தார்கள்
இருகாதம் பந்தலிட்டார்
மூங்கில் பிளந்தார்கள்
முக்காதம் பந்தலிட்டார்
நாணல் பிளந்தார்கள்
நாற்காதம் பந்தலிட்டார்"

இதைக் கேட்கும்போது, யாரும் முத்தாலே பந்தல் இல்லையே, பவளத்தால் பந்தல் இல்லையே, வெற்றிலைக் காலைக் காணேமே, வெற்றிலையை அதற்குமேற் காணேமே, நாலு காதம் பந்தல் இல்லையே, என்றெல்லாம் நினைப்பதே இல்லை. இப்பாட்டின் சொல்லொலி நயத்தில் ஈடுபட்டு விடுவோம். ஆதலால், அறிவு வேலை செய்வதில்லை.

"பாண்டத்தைக் கழுவிப்
பனிநீர் உலைவார்த்து
முத்துப்போற் சோறு
வடித்தாள் இளங்கொடியாள்
அத்தி விறகொடித்துத்
தித்திக்கப் பால்காய்ச்சிப்
புத்துருக்கு நல்லநெய்யும்
பொன்போற் பருப்புகளும்
அதிரசமும் தேன்குழலும்
அறுசுவைப் பண்டங்களும்
பத்துவிதக் கறியும்
பதினெட்டுப் பச்சடியும்
எட்டுவிதக் கறியும்
இயலான பலகுழம்பும்
முப்பழமுஞ் சர்க்கரையும்
அப்பளமும் தான்படைத்து
ஆயாசம் தீரவே
பாயசந்தான் கொடுத்தாள்"

என்று ஒரு பாட்டு இருக்கிறது. இதைக் கேட்கும்போது எவரும் இவ்வளவும் அப்படியே படைக்கப் பட்டன என்று நினைத்து விடுவதில்லை. ஒரு நல்ல உண்டி படைக்கப் பட்டது என்றே நினைக்கிறேம். பெரிய விருந்து நடந்தது என்று சொல்லத் தக்கதை இச்சொற்களால் பெருக்கி மடக்கிச் சொல்லுந்திறன் அப்பாட்டிற் காணப்படுகிறது

எனவே, நாட்டுப் பாடல்களின் நலங்கள் என்ன என்பதை ஒருவாறு கண்டோம். அவற்றைத் துய்க்க முயலுவதும் பாதுகாப்பதும் இக்காலத்து அறிவுடைய மக்கள் கடன்.

(மதுரை எழுத்தாளர் மன்ற 1959 ஆண்டு விழாச் சிறப்பு மலரில் வெளியானது.)

— 7-ம் பக்கத் தொடர்ச்சி —

அகநானூறு

பாட்டு 179
"மதிஏர் வாள்நுதல் புலம்ப"
—வாதுளி நற்சேந்தனர்.

பாட்டு 192
"மதி இருப்பன்ன
மாசுஅறு சுடர்நுதல்"
—பொதும்பில் கிழான் வெண்கண்ணனர்.

பாட்டு 299
"வைகுநிலை மதியம் போல"

புறநானூறு

பாட்டு 392
"மதிஏர் வெண்குடை
அதியர் கோமான்"

பாட்டு 398
"மதிநிலாக் கரப்ப"

பாட்டு 3
"உவவு மதிஉருவின்
ஓங்கல் வெண்குடை"
—இரும்பிடர்த் தலையார்.

பாட்டு 102
"இசைவிளங்கு கவிகை
நெடியோய்! திங்கள்
நாள்நிறை மதியத்து
அனையை"
—ஔவையார்.

(எட்டுத்தொகை முற்றும்)

பத்துப் பாட்டு

சிறுபாண் ஆற்றுப்படை

வரி 157
"மதி ஏக்கறூஉம்
மாசுஅறு திருமுகத்து"

வரி 185
"மதிசேர அரவின்
மானத் தோன்றும்"

வரி 219
"பல்மீன் நடுவண்
பால்மதி போல"

வரி 251
"உருவ வான்மதி
ஊர்கொண் டாங்கு"
—பாடியவர். நல்லூர் நத்தத்தனர்.

பெரும்பாண் ஆற்றுப்படை

வரி 17
"வெந்தெறற் கனலியொடு
மதிவலம் திரிதரும்"
—பாடியவர்: கடியலூர் உருத்திரங் கண்ணனர்.

மதுரைக் காஞ்சி

வரி 195-96
"குணமுதல் தோன்றிய
ஆர்இருள் மதியின்
தேய்வன கெடுக,
நின்தெவ்வர் ஆக்கம்"

வரி 452
"மழைமாய் மதியின்
தோன்றுபு மறைய"

வரி 548-49
"நாண்முதிர் மதியந்
தோன்றி நிலாவிரிபு
பகலுரு வுற்ற
விரவுவர நயந்தோர்"
—பாடியவர்: மாங்குடி மருதனர்.

பட்டினப்பாலை

வரி 35
"மதிசேர்ந்த மகவெண் மீன்"
—கடியலூர் உருத்திரங்கண்ணனர்.

மலைபடுகடாம்

வரி 62
"மதிமா றேரா
நன்றுணர் சூழ்ச்சி"

—தருமை வே. சௌந்தரராசன்
(புலவர் மாணவர்)

— 6-ம் பக்கத் தொடர்ச்சி —

சொல்வதா? இமயத்திற்குப் படையெடுத்த சேரனின் சிறப்பையும், டில்லிக்குகாவடி தூக்கும்காமராசரின் "திறனை"யும் சுட்டிக்காட்டிய இளவழகனர் சொற்செறிவின் அற்புதத்தை எழுதுவேன? இராசகுமார் பீட்டரும் தங்கப்பாண்டியனும் எடுத்துச் சொன்ன வலிய கருத்துக்களை வார்த்தைகளில் அடக்குவேன? சட்டக் கல்லூரி பாலுவும், நம் கூணைப் பொதுச்செயலாளர் என் வி. என். அவர்களின் குமாரர் சோமுவும் பொழிந்த இன்ப மழையை எடுத்தோதுவேன? மலைச்சாமியும் டி. கே. கோபாலகிருட்டிணனும் தந்த சுந்தரச் சொல் விருந்தைத் தருவேன?

ஆர்வமிக்கவரும் ஆற்றல் செறிந்தவரும் ஆன சோவை செழியன் கோலோச்சும் மன்னர் போல் நின்று நாவோச்சிய காட்சியைச் சொல்வேன? ஹோம்லேண்ட் வெங்கடாசலம் சொள்கை முழங்கியதையும், தலைவரென்ற அன்புப் பட்டத்திற்குரிய பொன்னுவேலர் திட்டம் வகுத்ததையும் சொல்வேன?

— 7 ம் பக்கம் —

பகட்டு குறைந்திருக்கும்;
பயனே நிறைந்திருக்கும்.

"தென்றல்"
பொங்கல் மலர்
1960.

விலை ரு. 2

பொறுப்பாளர்,
"தென்றல்"
சென்னை-6.

ஆசிரியர்: கண்ணதாசன். அச்சிடுபவர், வெளியிடுபவர்: சுப. அருணசலம், எ. எல். எஸ். அச்சகம், 2/127, மவுண்ட்ரோடு, சென்னை-6, தமிழ்நாடு
தொலைபேசி எண் 83510.